பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 23 வியாழக்கிழமை (08.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :286

# அரச பிரதேசங்களிலிருந்து வெளியேறினார்கள் புலிகள்!

## நோர்வேத் தூதுவரும் கண்காணிப்புக் குழுத் தலைவரும் பதற்றத்தைத் தணிப்பது குறித்து ஆராய வன்னிக்கு விரைவு

கொழும்பு, செப்.8

**இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த தமது போராளிகள் அனைவரையும் அங்கிருந்து திடீரென வாபஸ்பெற்றனர் விடுதலைப் புலிகள். இதனையடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலையைத் தொடர்ந்து இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வே யின் சார்பில் அந்நாட்டின் கொழும்புக்கான தூதுவர் ஹாண்ட்ஸ் பிரட்ஸ்கரும், போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹெக்லண்ட்டும் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்காக இன்று வன்னிக்கு விரைகிறார்கள்.**

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் போராளிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்திருப்பதை அடுத்து அப்பகுதிகளிலிருந்து புலிப்போராளிகள் முற்றாக வெளியேறியுள்ளனர்.

வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைமை விடுத்த விசேட பணிப்புரைக்கமையவே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மன்னார், அம்பாறை ஆகிய மாவட்டங்களின் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிகளிலிருந்து போராளிகள் வெளியேறியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைச் சின்னத்திலேயே மஹிந்த போட்டியிடுவார்?

கொழும்பு, செப்.8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ தீர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 2, 910 பேருக்கு இம்முறை '3A'

நேற்று வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி 2,910 பேர் 3 பாடங்களிலும் 'A' சித்தி பெற்றுள்ளனர் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரி சிங்க தெரிவித்தார். ஒரு லட்சத்து 16

(16 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளைத் திருப்பி அழைத்தது புலிகளின் முதற்கட்ட நடவடிக்கையே

### சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து போராளிகளை விடுதலைப் புலிகள் தமது நிர்வாகப் பகுதிக்குள் திருப்பி அழைத்துள்ளதை புலிகளின் முதற்கட்ட நடவடிக்கையே எனத்தெரிவித்துள்ளார் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன். அடுத்தடுத்த நடவடிக்கைகளைப் பொறுத்து தமது தலைமை மேலதிக முடிவுகளை எடுக்கும் என அவர் கூறினார்.

அவர் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அண்மைக்காலமாகத் தென் தமிழீழத்தில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இணையத்தளத்தில் வெளியாகின

யாழ்ப்பாணம்,செப்.8

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றைய தினம் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டன. பரீட்சைத் திணைக்களத்தின் wwwdeenets.lk என்ற இணைய முகவரியில் தொடர்புகொண்டு பெறுபேறுகளை அறிந்துகொள்ளமுடியும். மாணவர்கள் பலரும் இணையத்தளம் மூலம் பெறுபேறுகளை அறிந்துகொள்ள நேற்று முண்டியடித்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் சிபாரிசினை நேற்று அரசு ஏற்றது; புலிகளின் முடிவு இன்று

கொழும்பு, செப். 8

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதில் எழுந்துள்ள பிரச்சினைகளைப் பற்றிப்பேச நோர்வே உத்தேசித்துள்ள இடத்தை அரசு ஏற்றுள்ளது. அதேசமயம் புலிகளின் முடிவு அனேகமாக இன்று தெரியவரும்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இருதரப்பினரும் - புலிகளும் அரசும் - நேரில் சந்தித்து பேசும் இடமாக நோர்வே முன்மொழிந்திருந்தது. அந்த இடத்தையே அரசு ஏற்றுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போர் நிறுத்த உடன்படிக்கையை நடை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இந்துவின் மாணவன் தேசியநிலையில் முதலிடம்



யாழ்ப்பாணம்,செப்.8

நேற்று வெளியாகிய ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சை பெறுபேறுகளின் இசற் புள்ளி அடிப்படையில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவர் ஒருவர் தேசிய நிலையில் கணிதப்பிரிவில் முதலிடம் பெற்று சாதனை படைத்திருக்கிறார்.

சிவப்பிரகாசம் மயூரன் என்பவரே கணிதத்துறையில் இசற் புள்ளியில் 3.4102 என்ற புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாவது மாணவனாகத் தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.

அல்லாரையை சொந்த இடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்று பின்னர் யாழ். இந்துக் கல்லூரியில் இணைந்து கல்வி பயின்று வந்தார். (ஜ-13)

## அரசு – புலிகள் பேச்சுக்கான இடமாக கட்டுநாயக்க விமானநிலையம் சிபாரிசு

கொழும்பு, செப்.8

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்வது தொடர்பாக அரசு - புலிகள் இடையே நடைபெறவுள்ள உத்தேச பேச்சுக்களை நடத்துவதற்கான இடமாக கட்டுநாயக்க விமானநிலையத்தை நோர்வே அரசு சிபாரிசு செய்துள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் நேற்றுத் தெரிவித்தது.

இந்த விடயம் தொடர்பாகத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் நடைமுறை வழிவகைகளை வலுப்படுத்துவதற்கான சந்திப்புக்கான தத்தமது பற்றுறுதியை எழுத்தில் நோர்வே அரசுக்குத் தெரிவித்திருந்தனர்.

போர் நிறுத்த ஒப்பந்தம், அண்மை மாதங்களாக வன்செயல்களினால் படுமோசமாகப் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. அதனால், அரசும் புலிகளும் சந்தித்துப் பேசுவது தொடர்பாக நோர்வே ஆலோசித்து வந்தது. இரு தரப்பினரும் இதற்கு இணங்கினர்.

இச்சந்திப்புக்கள் இலங்கையிலேயே நடைபெறவேண்டும் என இலங்கை அரசு தெரிவித்து வருகிறது. விடுதலைப்புலிகளோ, சந்திப்பு கிளிநொச்சியில் இடம்பெறவேண்டும் அல்லது இலங்கைக்கு வெளியில் நிகழவேண்டும் எனக்கூறிவருகின்றனர்.

இந்தப்பின்னணியில், கொழும்பு சர்வதேச விமானநிலையமே உள்ள ஒரேயொரு சாத்தியமானஇடம் எனத் தீர்மானித்தது நோர்வே அரசு.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'சுடர் ஒளி' மீதான தாக்குதல் விசாரணை நடத்த அமெ. அமைப்பு வலியுறுத்து

'சுடர் ஒளி' மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து உரிய விசாரணைகளை நடத்துமாறு அமெரிக்க அமைப்பான 'மீடியா வோச் டோக்' அமைப்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் உள்ள 'சுடர் ஒளி' அலுவல

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. முன்வைத்த நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்வாராம் மஹிந்த

கொழும்பு, செப்.8.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்குவதற்காக ஜே.வி.பி. முன்வைத்துள்ள நிபந்தனைகளை தாம் மீள்பரிசீலனை செய்யப்போகிறார் என ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும், பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று நேற்றுமுன்தினம் இரவு அலரி

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

ஜனாதிபதித் தேர்தலில்

# இறுதி நேரத்தில் சந்திரிகாவே கூட ஐ.தே.கவை ஆதரிக்கும் நிலைவரும்!

## பிரதமரின் செயற்பாடுகள் அப்படி என்கிறார் அத்தநாயக்க

கொழும்பு, செப்.8

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் பிரதமரால் தூக்கியெறியப்பட்டுவிட்டன. ஜனாதிபதியின் கொள்கைகளுக்கும் முரணாகவே அவர் நடக்கின்றார். இதனால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இறுதி நேரத்தில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவே கூட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை ஆதரிக்கும்நிலை வரக்கூடும்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சர்வதேசத்தைப் புறக்கணித்துவிட்டுச் செயற்பட முடியாது. ஒஸ்லோவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படல்வேண்டும் என்பதில் ஐ.தே.க. உறுதியாக இருக்கின்றது. சமாதானப் பேச்சுகளை ஒருபோதும் கைவிட முடியாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இனவாதக் கட்சிகளுடன் செய்துகொண்ட கூட்டு இந்த நாட்டில் வாழும் தமிழர்களுக்குச் செய்த மாபெரும் துரோகமாகும். சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகி விடலாம் என்ற நப்பாசையுடன் அவர் செய்துகொண்ட உடன்படிக்கையானது மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான அடித்தளத்தை அமைத்துவிட்டது.

ஜே.வி.பியினர் முன்வைத்துள்ள 12 அம்சக் கோரிக்கைகளில் எட்டுக்கோரிக்கைகள் சிறுபான்மையினரைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன. பிரதமர் யாருடன் கூட்டு வைத்துக்கொண்டாலும் ஐ.தே.கவை அவரால் ஒருபோதும் தோற்கடிக்க முடியாது.

நாட்டின் ஜனாதிபதிகூட இறுதி நேரத்தில் ஐ.தே.கவை ஆதரிக்கக்கூடும். காரணம் அவரது கொள்கைக்கு முற்றிலும் முரணான வகையிலேயே பிரதமர் செயற்படுகிறார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொள்கைகள் தூக்கியெறியப்பட்டுவிட்டன. ஜே.வி.பியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அதற்கமையவே பிரதமர் செயற்படுகிறார்.

இலங்கை வரலாற்றில் பழைமைவாய்ந்த ஒருபலமான கட்சியாகவே ஐ.தே.க. இருந்து வருகிறது. கடந்த தேர்தலில் தனித்து நின்று 38 வீதமான வாக்குகளை அதுபெற்றுக் கொண்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தான் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன, பொதுக்கட்டமைப்பு நடைமுறைக்கு வருமா அல்லது செயற்படுத்தப்படாமல் கைவிடப்படுமா? என்பன போன்ற விவரங்களை உடன் அறிவிக்கவேண்டும். - என்கிறார் அவர். (ஐ-க)

## வாக்காளர் அட்டைகள் யாழ்.வந்துசேர்ந்தன

யாழ்ப்பாணம்,செப்.8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு வந்துசேர்ந்துள்ளன.

யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் 2004 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி 7 லட்சத்து ஆயிரத்து 938 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களுக்கு வழங்க 7 லட்சத்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர் அட்டைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவ்வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் ஈடுபட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலில் 6 லட்சத்து 15 ஆயிரத்து 361 வாக்காளர்கள் யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் பதிவு செய்திருந்தனர். எதிர்வரும் தேர்தலில் வாக்களிப்பதற்கு 50 ஆயிரத்து 812 வாக்காளர்கள் மேலதிகமாகத் தகுதிபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-202-203)

## ‘பொங்குதமிழ் - 2005’ எழுச்சி நிகழ்வின் பரப்புரைகள் பெரும் எடுப்பில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.8

வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசத்தில் உள்ள தமிழீழ அரசை அங்கீகரிக்குமாறு சர்வதேசத்திடம் கோரி யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள ‘பொங்குதமிழ் - 2005’ மாபெரும் எழுச்சி நிகழ்வு தொடர்பான பரப்புரைகளை யாழ்.பல்கலைக்கழக சமூகம் பெரும் எடுப்பில் பல இடங்களில் மேற்கொண்டு வருகின்றது.

மேற்படி எழுச்சி நிகழ்வுகளில் பொது மக்களையும், கல்விச் சமூகத்தையும் அணிதிரட்டும் பணிகள் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான முதல் விளக்கக் கூட்டம் நேற்று நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அடுத்த கட்டமாக பாடசாலை மாணவர்கள், கிராமங்கள், அரச திணைக்களங்கள் என மேற்படி விசேட கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன என்ற தெரிவிக்கப்பட்டது. (எ-13)

# சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் லொறிமோதி தலைசிதறிப் பலி!

## யாழ்.நகரில் நேற்றுமாலை கோரவிபத்து

யாழ்.நகர்ப்பகுதியில் லொறி ஒன்றும் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணம் செய்த குடும்பஸ்தர் ஒருவர் தலைசிதறுண்டு உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்றுப்பிற்பகல் யாழ்.ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்றது.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த 37 வயதுடைய பரஞ்சோதி - சதீஸ்குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பிற்பகல்வேளை ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்குச் சமீபமாக சைக்கிளை உருட்டிச் சென்றுகொண்டிருந்த சமயம் பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்த லொறி ஒன்றுடன் இவர் விபத்துக்குள்ளானார் என்று கூறப்படுகிறது. இதன்போது லொறியின் பின் சக்கரத்தினுள் தலை நசியுண்டதில் இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து சடலம் உடனடியாகவே யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த யாழ்.நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் விபத்தை நேரில் கண்டவர்களின் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்தார். சம்பவம் நடந்த இடத்தையும் பார்வையிட்டார். அதன் பின்னர் யாழ்.ஆஸ்பத்திரிக்குச் சென்று உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலத்தையும் பார்வையிட்டார். - பிரேதபரிசோதனைகளையடுத்து சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

யாழ்.பொலீஸ்நிலையப் போக்குவரத்துப் பொலீஸார் இராணுவப் பாதுகாப்புடன் வந்து விசாரணைகளை நடத்தினர். (ஐ-7-ரி-78)



யாழ்.ஆஸ்பத்திரியில் சடலத்தைப் பார்வையிடுகிறார் மேலதிக நீதிவான்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளதுபோன்று

# பதவியிலிருந்து அகன்ற பின்னரும் சந்திரிகா நாட்டுக்குச் சேவையாற்ற திட்டம் ஒன்று தேவை

## இப்படிக் கூறுகின்றார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, செப்.8

அமெரிக்கா போன்ற நாடுகளில் முன்னாள் ஜனாதிபதி பதவியிலிருந்து அகன்ற பின்னரும் நாட்டுக்குச் சேவையாற்ற அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. அந்த முறையை இலங்கையிலும் ஏற்படுத்த வேண்டும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் அவர் நாட்டுக்குச் சேவையாற்றக் கூடிய திட்டம் குறித்துக் கவனம் செலுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஐ.தே.க. தலைவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

அதிகாரத்திற்கு வந்த பிறகு மக்களுக்கு எவற்றைச் செய்யலாம் என்பதைப் பொறுத்தே எமது தேர்தல் கொள்கைகள் அமையவேண்டும். இதற்கான குறுகிய மற்றும் தொலைதூரக் கொள்கைகளை ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நாட்டைப் பிரிக்காமல் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்திசெய்ய வேண்டுமானால் தொடர்ச்சியாக ஒன்றரை தசாப்த காலத்திற்கு ஒரே கொள்கைத் திட்டம் நடைமுறையில் இருக்கவேண்டும். எமது தேசியத் திட்டம் அவ்வாறே தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கைத் திட்டத்திற்கு மக்களின் அனுமதி பெறும் ஒரு செயற்பாடாகவே ஜனாதிபதித் தேர்தலை நாம் கருதுகிறோம். இந்தக் கொள்கைத் திட்டத்திற்கு இதர கட்சிகளின் ஒத்துழைப்பையும் பெறவேண்டியுள்ளது.

மக்கள் ஏற்றுக்கொள்ளும் தேசியக் கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எமது அரசுடன் ஒன்றுசேருமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன். எமது கட்சியுடன் ஒன்று சேர்ந்து மக்களுக்குச் சேவையாற்ற முடியும். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் புதிய திட்டத்தை ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் ஐ.தே.க. நடைமுறைப்படுத்தும். ஏனைய அரசியல் கட்சிகளும் எம்முடன் இணைந்துகொண்டால் ஜனநாயக மேம்பாடடைந்த நாடாக இலங்கையை மாற்ற முடியும். - இவ்வாறு ஐ.தே.க. தலைவர் மேலும் கூறினார். (ஐ-க)

## சிவானந்தா ஜெயந்தி

குருதேவர் சுவாமி சிவானந்த சரஸ்வதியின் ஜெயந்திதின வைபவம் இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் நல்லூர் திவ்ய ஜீவன் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்றையதினம் பாத பூஜை, பஜனை மற்றும் குருதேவர் நினைவாக சிறுவர் இல்லத் திற்கு அன்பளிப்பு வழங்கும் வைபவம் என்பன இடம்பெறவுள்ளன. (9)

# குடாக்கடலில் வெடிவைத்து மீன் பிடிப்பது முற்றாகத் தடை

## குருநகர் கடற்றொழிலாளர் இணையம் அறிவிப்பு

குடாக்கடலில் வெடி வைத்து மீன் பிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனை மீறித் தொழில் செய்வோர் உடன் இனங்காணப்பட்டாலோ அல்லது காலம் கடந்து இனம் காணப்பட்டாலோ அவர்கள் தொழில் செய்வது தடுக்கப்படுவதுடன் அவர்களது தொழில் உபகரணங்களும் காலவரையறையின்றித் தடைசெய்யப்படும்.

இவ்வாறு குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்களின் இணையம் மீனவர்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

கடற்றொழில் செய்வோர் பகுதிநேரமாக வெடிவைத்து மீன் பிடிப்பது இனம் காணப்பட்டால் அவர்களது மீனவ அனுமதிஅட்டை காலவரையறையின்றிப் பறிமுதல் செய்யப்படும்.

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து குடாக்கடலில் வெடிவைத்து மீன்பிடித் தொழில் செய்பவர்களின் தொழில் உபகரணங்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்.

குருநகர்ப் பகுதி மீனவர்கள் வெளியூர்க் கடலில் மீன்பிடிக்கும்போது வெடிவைத்து தொழில் செய்வதாக தெரியப்படுத்தப்பட்டால் அந்த மீனவர்களும் மேற்கூறிய தண்டணைக்கு உள்ளாக்கப்படுவர் - என்றுள்ளது. (எ-51)

# யாழ்.மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்றும் நாளையும் இடியுடன் கூடிய மழை

## கொழும்பு வானிலை ஆராய்ச்சி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,செப்.8

யாழ்.மாவட்டத்தின் சில பகுதிகளில் இன்றும், நாளையும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று கொழும்பிலுள்ள வானிலை ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய மாவட்டங்களில் கடந்தசில நாள்களாகத் தொடர்ச்சியாக பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்துவருகின்றது. இதனையடுத்து, யாழ்.மாவட்டத்தின் தற்போதைய காலநிலை பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னிலங்கையின் பல பகுதிகளில் பெய்துவரும் பலத்த மழை போன்று யாழ்ப்பாணத்தில் பெய்யக்கூடிய வாய்ப்புகள் ஏதுமில்லை.

இருப்பினும், ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அத்துடன், வானம் மப்பும் மந்தாரமுமாகக் காட்சியளிக்கும்.

இடியுடன் கூடிய மழை பெய்கின்ற வேளைகளில் பொதுமக்கள் இலத்திரனியல் கருவிகளைப் பயன்பாட்டில் வைத்திருப்பதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று அவர் தெரிவித்தார். (எ-13)

# உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.


## ஒன்று திரளும் பேரினவாதத்தை ஆதரிப்பது குறித்துப் பரிசீலிப்பதா?

"தீவிர தமிழர் விரோதக் கட்சியான ஜே.வி.பியுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செய்துகொண்டிருக்கும் 12 அம்ச உடன்படிக்கை தொடர்பாகத் தமிழ்க்கட்சிகள் அனைத்தும் தனிப்பட்ட முரண்பாடுகளை ஒதுக்கி ஒரேமுடிவை எடுக்க வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டுள்ளது." - இவ்வாறு வற்புறுத்திக் கூறியிருக்கின்றார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன்.

இந்த விடயம் உட்பட ஆறு அதிமுக்கியமான விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்கு அனைத்துத் தமிழ் அமைப்புகளுக்கும், கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார் அவர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துவரும் தற்போதைய சூழ்நிலையில் -

தமிழ் மக்களினதும், முஸ்லிம் சமூகத்தினதும் அரசியல் எதிர்பார்ப்புகள், பிரச்சினைகளுக்கான தீர்வு, மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் வேலைத்திட்டம், நச்சுப் போல பரவிவரும் இனவாத அரசியல் போக்கு, மஹிந்த ராஜபக்ஷ - ஜே.வி.பி. உடன்பாட்டால் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து, தமிழரின் அபிலாஷைகளை உலகறியச் செய்யும் விதத்தில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்துதல் ஆகியன தொடர்பாகத் தமிழ்க் கட்சிகளிடையே ஒன்றுபட்ட நிலைப்பாடு ஒன்றை எட்ட வைக்கும் முயற்சியாகவே இந்த அழைப்பை அவர் விடுத்திருக்கின்றார்.

இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனைக் கட்டத்தில் தமிழ்பேசும் மக்கள் இன்று இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் அடிப்படை விடையங்களையே அடியோடு புறந்தள்ளி, தொடர்ந்தும் அவர்களை அடக்கி, ஒடுக்கி ஆட்சி செய்வதை ஏகநோக்கமாகக் கொண்ட பௌத்த, சிங்கள மேலாண்மைவாதிகளும், பேரினவாதிகளும், ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பின்னால் அணிதிரளும் அபாயகரமான போக்கை நாடு இன்று சந்தித்துக்கொண்டிருக்கின்றது.

இந்த அபாயகரமான அணிக்கு ஆதரவு வழங்கலாமா என்பது குறித்தும் சில தமிழ் பேசும் கட்சிகள் பரிசீலித்து வருகின்றன என்று செய்திகள் வெளியான பின்னணியிலேயே, இந்த விவகாரங்கள் குறித்து ஆராய்ந்து ஒருமித்த முடிவு எடுப்பதற்கு வாருங்கள் என்று அக்கட்சிகளுக்கும் சேர்த்து அழைப்பு விடுத்திருக்கின்றார் மலையக மக்கள் முன்னணித் தலைவர்.

*"இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இறுதித் தீர்வு குறித்து மட்டுமே இனிப் பேச்சு. அதுவும் ஒற்றையாட்சி முறைக்குள்தான் எந்தத் தீர்வும். அத்தோடு புலிகளுடன் மட்டுமல்லாமல் எல்லா அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களுடன் பேச வேண்டும். தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தம் மாற்றியமைக்கப்பட வேண்டும். நோர்வே அனுசரணைப் பங்களிப்பை மீளாய்வு செய்தல் வேண்டும்." - போன்ற முடிவுகளுக்கு ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ இணங்கி விட்டார் என ஜே.வி.பி. அறிவித்து இரண்டு நாள்கள் கடந்து விட்டன.*

ஆனால், பிரதமர் மஹிந்த பக்கத்திலிருந்து இப்பத்தி எழுதப்படும்வரை இவ்விடையத்தில் திட்டவட்டமான மறுப்பு ஏதும் வரவில்லை. 'மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி' - என்ற அர்த்தத்தில் பிரதமரின் மௌனத்தை, ஜே.பி.பியின் அறிவிப்புக்கான உடன்பாடாகவே கொள்ளவேண்டியுள்ளது.

அது மட்டுமல்ல. இதேபோன்ற - தமிழரின் நலன்களுக்கு விரோதமான அம்சங்கள் அடங்கிய - பிறிதொரு உடன்பாட்டுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இணங்கியிருக்கிறார் என்றும் அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. தீவிர பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கும் அடிப்படை மதவாதப் பின்னணியும் கொண்ட மற்றொரு அமைப்பான ஜாதிக ஹெல உறுமயவுடனேயே பிரதமர் அத்தகைய உடன்பாட்டுக்கு வந்திருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆக, இந்த ஜனாதிபதித் தேர்தலில் பௌத்த - சிங்கள தீவிரவாதப் போக்குடைய தென்னிலங்கைச் சக்திகள் எல்லாம் ஒன்று திரளும் ஒரு தலைமையைக் கொடுப்பதன் மூலம் தன்னை யார் எனத் தெளிவாக அடையாளம் காட்டத் தயாராகி விட்டார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

இதன் பின்னரும் -

காலங்காலமாக சிறுபான்மை மக்களின் நலன்களுக்காகக் குரல் எழுப்பும் கட்சி என்றும் தமிழ் பேசும் மக்களுக்காகவும் தொழிலாளர்களுக்காகவும் போராடும் அமைப்பு என்றும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு தமிழ்க் கட்சி, எதிர்வரும் தேர்தலில் யாரை ஆதரிப்பது, மஹிந்தவையா, ரணிலையா என்றுதான் பரிசீலித்துக்கொண்டிருப்பதாகக் கூறுவது கேலிக்கூத்தேயன்றி வேறில்லை.

சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளுக்கு எதிரான பேரினவாதக் காட்டுக் கூச்சலுக்கு இணங்கும் ஓர் ஒப்பந்தத்திற்குச் சம்மதம் கூறிய பெரும்பான்மைக் கட்சி வேட்பாளரை அதற்காக - விரைந்து - கண்டிப்பதை விடுத்து, அவரையும் ஆதரிக்கலாமா என்பது குறித்து இன்னும் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சிறுபான்மையினர் நலன் பேண வேண்டிய கட்டாயக் கடப்பாடுள்ள ஒரு கட்சி கூறுவது -

தனக்குள்ள வாக்குவங்கியைக் காட்டி வேட்பாளர்களிடம் கோடிக் கணக்கில் நிதி வாங்குவதற்குப் பேரம் பேசும் வேலை மும்முரமாக நடைபெறுவதாக வெளியில் அடிபடுகின்ற 'கதைகளை' - குற்றச்சாட்டுக்களை - உறுதிப்படுத்துவதாகவே இருக்கும்.

சம்பந்தப்பட்டோருக்கு இது சமர்ப்பணம்.

# நாட்டைப் பிளவுபடுத்தப்போகிறது பிரதமர்-ஜே.வி.பியினர் கூட்டணி

## சுரேஷ் எம்.பி. கருத்து

கொழும்பு,செப்.8

ஐக்கிய இலங்கைக்கு வேட்டு வைத்து நாட்டை இரண்டாகப் பிரிக்கப் போகிறது பிரதமர் - ஜே.வி.பி. கூட்டு. இந்தக் கூட்டணி நாட்டைச் சீரழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். - இவ்வாறு எச்சரிக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரமேச் சந்திரன்.

பிரதமர் - ஜே.வி.பி கூட்டுக்குறித்துக் கருத்துக்கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும்பான்மை இனச் சிங்களவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே ஒற்றை ஆட்சி முறையின் கீழ்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

பொதுக்கட்டமைப்பு முற்றாகக் கைவிடப்படும் என்றும், இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் இந்தக் கூட்டணியினர் கூறுகின்றனர்.

இந்த லட்சணத்தில் இவர் எப்படி தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுடன் நேரடியாகப் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வு. காணப்போகின்றார்? இது ஒரு பம்மாத்துக்கதை.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஒற்றை ஆட்சியின்கீழ் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. ஒற்றை ஆட்சியின் கீழ் தீர்வு என்பதை நினைத்துப் பார்க்க முடியாது.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண வேண்டும் என்பதே தமிழர்களின் நோக்கம். ஆனால், பிரதமரும் ஜே.வி.பி.யினரும் செய்துள்ள கூட்டு - நாட்டை இரண்டாகப் பிரித்தே ஆகவேண்டும் என்ற கட்டாயநிலைக்கு அவர்களைத் தள்ளுகின்றது.

தான் வெற்றிபெறவேண்டும், பெரும்பான்மை சிங்களவர்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்ற ஒரே காரணத்தால் பிரதமர், ஜே.வி.பியினருடன் கூட்டுச் சேர்ந்துள்ளார். இது தனித் தமிழ் ஈழத்தை அமைக்கவே வழி வகுத்துக் கொடுத்துள்ளது என்றும் - சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கூறினார். (க-3)

# கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்க வடக்கு-கிழக்குக்கு விசேட குழு

வடக்கு-கிழக்கில் நிலவும் கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென விஷேட குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக அம்பாறை சிங்களப் பிரதேசத்தில் வழங்கப்பட்ட தொண்டராசிரியர் நியமனம் நிறுத்தப்பட்டமை தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

748நவோதய பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நீக்க போதிய நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட மாகாணத்தின் அரசியல் பிரதிநிதிகள் இந்த நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு கேட்டுக்கொள்ளப்படலாமெனவும் தெரியவருகிறது.

கல்வியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வட.கிழக்கில் முதன்முறையாக பிரச்சினைகளைக் கையாள குழுவொன்றை நியமிக்கவிருப்பது வரவேற்புக்கு உரியதாகும். (9-84)

# கால்நடைகளின் தண்ணீர்ப் பிரச்சினை; புங்குடுதீவில் 3 குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,செப்.8

புங்குடுதீவில் நிலவும் வரட்சி காரணமாக கால் நடைகள் உயிரிழந்து வரும் அபாய நிலையை போக்குவதற்காக அங்குள்ள சில குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

புங்குடுதீவுப் பகுதியில் கடும் வரட்சி காரணமாக குளங்கள், நீர்நிலைகள் வற்றியமையால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் குடிதண்ணீர் இல்லாமல் இறக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. இதுவிடயமாக அப்பகுதி வாழ் மக்களும் வட இலங்கைச் சர்வோதய நிறுவனமும் பசுக்கள் இடபங்களை பாதுகாப்பதற்கான இணையத்திடம் அறிவித்திருந்தன. அதற்கமைய இணையத்தின் பிரமுகர் கள் நேரடியாக விஜயம்செய்து அப்பகுதி நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

அதனைத் தொடர்ந்து பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணையத்தின் உபசெயலாளர் சி.சச்சிதானந்த ஐயரின் நிதியுதவி மூலம் புங்குதீவு நாவலடிப் பகுதியிலுள்ள இரண்டு நன்னீர்க் குளங்கள் சேறு எடுத்து ஆழப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் தற்போது சுமார் இரண்டு முதல் மூன்று அடிவரை ஆழத்திற்கு நன்னீர் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. அதேசமயம், புங்குடுதீவுப் பகுதியிலுள்ள அடைகாத்த குளம் சேறெடுத்து ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு இணைய அமைப்பாளர் குகங்கைவேணியன் இதற்கு நிதியுதவி வழங்கினார்.

இதன் மூலம் புங்குடுதீவுப் பகுதியில் கால்நடைகளின் குடிதண்ணீர்ப் பிரச்சினை குறிப்பிடத்தக்களவு நீங்கியுள்ளது.

இதேவேளை-

புங்குடுதீவு இறுப்பிட்டி நாச்சிமார் கோயிலடிக்குளம் உட்பட மேலும் ஒரு சில குளங்களை சேறெடுத்து ஆழப்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (9)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சர்வதேச சிறுவர் தினம் அடுத்த மாதம் ஒக்ரோபர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனையொட்டி வடக்கு-கிழக்கு சிறுவர் நன்னடத்தை நிறுவனம் பல்வேறு போட்டிகளை பாடசாலை மட்டத்தில் நடத்தவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

கட்டுரை,கவிதை, நாடகம், பாட்டு ஆகிய போட்டிகளே நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்கள் சிறுவர் தினம் அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள விழாவில் வைத்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (9-13)

### நாளை

ஆவணி 24
வெள்ளிக்கிழமை
09.09.2005
திதி: ஷஷ்டி
பின்னிரவு 03.12 வரை
நட்சத்திரம்: விசாகம்
பின்னிரவு 12.20 வரை
சுபநேரம்: 06.04 - 07.34
ராகுகாலம்: 10.34- 12.04
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

நான் எதையும் சாதிக்க வல்லவன் என்று சொல். நீ உறுதியுடன் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகிவிடும்

– சுவாமி விவேகானந்தர்.



ஓம் ஸ்ரீ முத்துவிநாயகர் துணை
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



# திருமண அழைப்பு

நிகழும் சுபமங்களகரமான பார்த்திப வருஷம் ஆவணி மாதம் 23 ஆம் நாள் இன்று (08.09.2005) வியாழக்கிழமை முற்பகல் 9.16 மணி முதல் 9.40 மணிவரையுள்ள துலா லக்கினமும், சுவாதி நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி முருகையா பத்தர் தம்பதிகளின் புதல்வன் திருவளர் செல்வன்
**சசிகுமார்(சசி)**
அவர்களுக்கும்

திரு.திருமதி இரத்தினம் ஆச்சாரி தம்பதிகளின் புதல்வி திருவளர் செல்வி
**சங்கீதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணமும் அதைச் சார்ந்த நாகவள்ளி முதலிய வைபவங்களும் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் 08.09.2005 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி முருகையா பத்தர் குடும்பத்தினர்
இல. 71, பெரிய தம்பிரான் வீதி.
வண்ணார்பண்ணை , யாழ்ப்பாணம்

திரு.திருமதி இரத்தினம் ஆச்சாரி குடும்பத்தினர்
இல. 188/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இரு வீட்டார் அழைப்பு (39732)

### சமுர்த்தி வங்கி கட்டடம் திறப்பு

வரணி சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கணேஸ் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

(த-70)

### தவறிவிட்டது

செல்வி யசந்தா மயில்வாகனம் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (736670380V), தொழில் அடையாள அட்டை என்பன முகமாலைச் சோதனைச் சாவடியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் *கிளி/அரசினர் அ.த.க பாடசாலை கல்மடு நகர்* எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(சி/45060)(46-21.17.34)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**மகேஸ்வரி மகேந்திரா**
பிரதி அதிபர்
(B.Sc.,PGDE, SLTS -I)

எமது கல்லூரியின் புதிய பிரதி அதிபராக 05.09.2005 அன்று கடமைப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டுள்ள கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியரும் கல்லூரியின் பழைய மாணவியுமான

**திருமதி மகேஸ்வரி மகேந்திரா**

அவர்களை சேவை சிறக்கப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- கல்லூரிச் சமூகம்
யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,
கரவெட்டி.

(சி-45065)(21.17.34)

# சக்தி T.V. சக்தி F.M. இன்

7 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தினை முன்னிட்டு
யாழ்.மாவட்டத்திற்கான மாபெரும்
**சைக்கிள் ஓட்டப்போட்டி**
**10-09-2005**



குறிப்பு:-

போட்டியாளர்களுக்கான விதிமுறைகளுக்கும் ஓட்டப்பாதை விவரங்களுக்கும் மற்றும் மேலதிக விவரங்களுக்குமான முக்கியமான கலந்துரையாடல்
**இன்று (08.09.2005) வியாழக்கிழமை**
**பிற்பகல் 5 மணி**
**வீரசிங்கம் மண்டபத்தில்**
நடைபெறவுள்ளது இக்கலந்துரையாடலில் பங்குபற்றி உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி உங்கள் ஓட்ட இலக்கங்களை பெற்றுக்கொள்ளவும்

## போட்டிக்கானபாதை

ஆரம்பம்
துரையப்பா விளையாட்டரங்கு → கண்டி வீதியூடாக → கொடிகாமம் → வரணி வீதியூடாக → கலிகைச் சந்தி → நெல்லியடி → பருத்தித்துறை வீதியூடாக → வல்லைச் சந்தி → அச்சுவேலி → நிலாவரை → புன்னாலைக்கட்டுவன் வீதியூடாக → சுன்னாகம் → மருதனார்மடம் வீதியூடாக → கொக்குவில் → கே.கே.எஸ். வீதியூடாக → துரையப்பா விளையாட்டரங்கு
முடிவிடம்

### மோதிவிட்டுத் தப்பிச்சென்ற ஓட்டோ மடக்கிப்பிடிப்பு

தொல்புரம், செப்.8

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர் ஒருவரை மோதிய ஓட்டோ ஒன்று தப்பிச்சென்றது.

யாழ்.ஸ்ரான்லி வீதிப் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர் கா.கருணாகரன் என்பவரே படுகாயமடைந்தார்.

மேற்படி வைத்தியர் வீதியின் ஓரத்தில் நின்று சக வைத்தியர் ஒருவரோடு கதைத்துக்கொண்டு நின்ற சமயம் மிக வேகமாக வந்த ஓட்டோ ஒன்று அவரை மோதி விட்டுத்தப்பிச் சென்றது என்று கூறப்படுகிறது.

காயமடைந்த வைத்தியரை சக வைத்தியர்கள் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பந்தப்பட்ட ஓட்டோவும் நல்லூர்ப் பகுதியில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டது.

(9-119)

## Training Division

இதயம் குளிரும் இணையம் — a member of Dream Solutions(Pvt) Ltd. "The solutions people"

**140, Navalar Road, Jaffna. (Near Manora Theatre)**

20ஆம் திகதி வரை 50% Special Offer

# Internet & Em@il

புதிய வகுப்புகள் ஆரம்பம்

Day / Night Classes 90% Practical

ஆசிரியர்கள், அலுவலர்கள் போன்றோருக்கு விசேட இரவு நேர வகுப்புகள். (சி-45064)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மாவட்டத்தில் பல சமூகசேவை நிறுவனங்களில் சேவையாற்றிய முன்னாள் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரான

**உயர்திரு.சீ.வி.கே.சிவஞானம்**

அவர்கள் மீண்டும் 05.09.2005 முதல் ஆணையாளராகப் பதவி ஏற்றமையையிட்டு அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இ.தெய்வேந்திரம் பிள்ளை குடும்பம் (J.P.)
எழுதுமட்டுவாள் தெற்கு, எழுதுமட்டுவாள்.

(சி-44914)(21.34.17)

## மரண அறிவித்தல்

### கதிர்காமசிங்கம் மகேஸ்வரி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமசிங்கம் மகேஸ்வரி நேற்று (07.09.2005) புதன் கிழமை இறைபதம் எய்தினார்

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமசிங்கத்தின் அன்பு மனைவியும் செல்வநாயகம், பொன்னுத்துரை, சபாநாயகம், நாகரத்தினம், மனோன்மணி, நாகபூசனி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வாலாம்பிகை, ஜெயசோதி, காலஞ்சென்ற கைலாயபிள்ளை மற்றும் சொர்ணவடிவேல், சிறீரங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் லவேந்திரநாதன், கருணாகரன் (U.S.A.), Dr.கணேசரட்ணம்(U.K.), கை.திலகவதி, சொ.சாரதா ஆகியோரின் அன்பு மாமியாரும் கம்சானந்தி (U.K.), கம்சரூபன் (U.K.), Dr.சயந்தன்(U.K.), Dr.இனிதன் (U.K.), வினோதன் (U.K.), கஜவதனி, மயூரதி, மயூறன், குருதரன், கிரிதரன், கஜேந்திரன் (U.S.A.), கல்ப்பனா (U.S.A.) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் கைலாயன், நிதிலேஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2005) வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பின் தகனக்கிரியைக்காக பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(சி/39716)

தகவல்:
**மகன், மகள்.**

### தவறிவிட்டது

**சி.மகேஸ்வரன்** என்பவரின் 8800 இலக்க NOKIA ரக கைத்தொலைபேசி ஒன்று 05-09-2005 திங்கட்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்றிலில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் *கதயாளன், வளர்மதி வீதி, கைதடி மத்தி* என்ற முகவரியுடனோ அல்லது 077 6155443, 0777243419 ஆகிய தொலைபேசியுடனோ தொடர்பு கொண்டு ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (39718)

## KURSK STATE MEDICAL UNIVERSITY, RUSSIA (KSMU)

### வரவேற்பாளர் தேவை

யாழ்.மாவட்டத்தில் திறக்கப்படவுள்ள ரஷ்ய குர்ஸ்க் அரச மருத்துவ பல்கலைக்கழகத்தின் 'இலங்கை ஒருங்கிணைப்பாளர்' அலுவலகத்திற்கு ஆங்கிலத்தில் சரளமாகவும், அழகாகவும் பேசக்கூடிய கணனி அறிவுடைய பெண் / ஆண் வரவேற்பாளர்கள் தேவை.

புகைப்படத்துடன் விண்ணப்பப்படிவங்களை அனுப்பவும்
(புகைப்படம் திருப்பி அனுப்பப்படும்)

Office of the Sri Lankan Co-Ordinator - KSMU
No. 02,Thiruvalluvar Lane, Arasady Road,
Kantharmadam, Jaffna.
T.P.: 0777 250555
email ksmu@sltnet.lk
(மின்னஞ்சலூடாகவும் விண்ணப்பங்களை அனுப்பலாம்)
Website:www.ksmu.info

(39726)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 711 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 06-9-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4722903-4738764 |

வெற்றி இலக்கங்கள்
**12 25 26 48**

ஜக்பொட் பரிசு
ரூபா. 10,00,000/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 17,76,900/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,47,783 | 10/- | 34,77,830/- |
| 2.இலக்கங்கள் | 31,967 | 20/- | 6,39,340/- |
| 1.இல லக்கினம் | 31,616 | 30/- | 9,48,480/- |
| 2.இல லக்கினம் | 2,884 | 100/- | 2,88,400/- |
| 3.இலக்கங்கள் | 835 | 500/- | 4,17,500/- |
| 3.இல லக்கினம் | 82 | 5,000/- | 4,10,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 65,81,550/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 76,33,800/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 76,33,800/- தொடர் இல. 5675611 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்


அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி,
கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 4731773-1-56 |
| பொலன்னறுவை | 4724137-9-83 |
| கண்டி | 4733529-9-43 |
| களுத்துறை | 4726492-5-91 |
| மாத்தறை | 4724561-0-03 |

# நியூ ஓர்லியன்ஸ் நகரத்தில் மட்டும் 10ஆயிரம் பேர் கத்தரீனாவுக்குப் பலி!

## அந்நகர மேயர் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



நியூ ஓர்லியன்ஸ்,செப்.8

அமெரிக்காவில் நியூ ஓர்லியன்ஸ் நகரில் மட்டும் கத்தரீனா சூறாவளி தாக்கி 10 ஆயிரம் பேர் பலியாகியுள்ளதாக அந்த நகர மேயர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

சூறாவளியின் காரணமாக அலபாமா, மிசிசிப்பி, லூசியானா ஆகிய மூன்று மாகாணங்களில் பாரிய அழிவு ஏற்பட்டது.

லூசியானா மாநிலத்தில் உள்ள நியூ ஓர்லி

உலக அரங்கில்

யன்ஸ் நகர் வெள்ளத்தில் முற்றாக மூழ்கியது.

நியூ ஓர்லியன்ஸ் நகரில் மட்டும் 10 ஆயிரம் பேர் சூறாவளிக்குப் பலியானதாக அந்த நகர மேயர் ரே நாகின் அறிவித்துள்ளார்.

வெள்ளம் ஏற்பட்டு ஒரு வாரம் ஆகியும் இன்னும் வடியவில்லை. வெள்ளம் சூழ்ந்த வீடுகளில் யாராவது சிக்கித் தவிக்கிறார்களா என்பதைக் கண்டறிவதற்காக மீட்புக் குழுவினர் படகுகள், ஹெலிகள், இராணுவ வாகனங்கள் ஆகிவற்றில் வீடு வீடாகச் சென்று தேடிவருகிறார்கள்.

வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் பலர் இறந்துபோய் பிணமாகக் கிடக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில், கத்தரீனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகள் மிக மெதுவாக நடப்பதற்கு ஜனாதிபதி புஷ்ஷுக்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கிளின்ரனும் புஷ்ஷுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தொடக்கத்தில் எமது அரசு நிவாரணப் பணிகளை வேகமாகச் செய்யத் தவறிவிட்டது என்று கிளின்ரன் கூறினார்.

ஜனாதிபதியின் தந்தை புஷ் கூறுகையில் -

என்மகனை எல்லோரும் விமர்சிப்பதும் கண்டிப்பதும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால், பொது வாழ்க்கையில் இது தவிர்க்க முடியாதது - என்று கூறினார். (8)

# யூப்பிரடீஸ் பாலங்கள் மீது அமெ.விமானத் தாக்குதல்!

பக்தாத்,செப்.8

சிரியா எல்லை அருகே யூப்பிரடீஸ் நதியின் மீது அமைந்துள்ள இரு பாலங்களை அமெரிக்கப் போர் விமானங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை குண்டு வீசித் தாக்கின.

இந்தப் பாலங்கள் வழியாகப் பக்தாத் மற்றும் ஈராக்கின் இதர முக்கிய நகரங்களுக்குள் வெளியிலிருந்து அல்கெயடா பயங்கரவாதிகள் நுழைவதையும், வெடிபொருள்கள் கடத்திவரப்படுவதையும் தடுப்பதற்காக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவத் தலைமை தெரிவித்தது.

பக்தாத் நகருக்கு 300 கிலோமீற்றர் மேற்கே இந்தப் பாலங்கள் உள்ளன. (8)

# விமானத் தாக்குதலில் 12 தீவிரவாதிகள் பலி!

காபூல்,செப்.8

ஆப்கானில் எதிர்வரும் 18ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடக்கிறது. இதைத் தடுக்கும் வகையில் தீவிரவாதிகள் வேட்பாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக அமெரிக்கா - ஆப்கான் இராணுவம் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஜாபுல் மாநிலத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை நோக்கித் தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனையடுத்து அப்பகுதியில் அமெரிக்கப் போர் விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் 12 தீவிரவாதிகள் பலியானார்கள்; 9 தீவிரவாதிகளை இராணுவத்தினர் கைதுசெய்தனர். (8)

# பாதுகாப்புத் தகவல் பரிமாற்றம்: சீனாவுடன் இந்தியா ஒப்பந்தம்

புதுடில்லி,செப்.8

பாதுகாப்புத் தொடர்பான புலனாய்வுத் தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்வது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் இந்தியாவும் சீனாவும் கைச்சாத்திடவுள்ளன.

இந்தியா உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் சீனாவில் மேற்கொள்ளவிருக்கும் 5நாள்சுற்றுப் பயணத்தில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு மத்திய அமைச்சரவைக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை ஒப்புதல் அளித்தது. இக்குழுவின் கூட்டம் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடந்தது. பாதுகாப்புத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இதில் கலந்து கொண்டார்.

சீனாவுக்கு அரசு அலுவல் தொடர்பாக சிவராஜ் பட்டேல் சுற்றுப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும். அங்கு சீனப் பிரதமரை அவர் சந்திக்கவுள்ளார்.

பயங்கரவாதத்தைத் தடுப்பது, பேரழிவு நிவாரணம் உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இந்தப் பயணத்தின் போது அவர் விவாதிக்கவுள்ளார். (8)

# அனைத்துக் கிறிஸ்தவர்களையும் ஒன்றிணையுமாறு பாப்பரசர் அழைப்பு



அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒன்றாக இணையவேண்டும். இவ்வாறு பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ற் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

வத்திக்கான் நகரில் கத்தோலிக்க - ஓர்த் தோடக்ஸ் மாநாடு கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.

அந்த மாநாட்டுக்கென அனுப்பிவைத்த செய்தியிலேயே பாப்பரசர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஒன்றாக இணையவேண்டும். இது தொடர்பான முயற்சிகள் உடனடியாகத் தொடங்கப்படவேண்டும். தொடர்பான முயற்சிகள் உடனடியாகத் தொடரவேண்டும்; பேச்சுக்கள் நடைபெறவேண்டும். கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் - ஓர்த்தோடக்ஸ் இடையே 1000 ஆண்டுகளாக இருந்துவரும் கருத்து வேறுபாடு உடனடியாகக் களையப்படவேண்டும். இதற்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். இதுதான் எனது முதல் குறிக்கோள். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அனை வரும் ஒன்றுசேர வேண்டும் - என்றுள்ளது. (8)

# டில்லியில் ரொனி பிளயர்



சென்னை விமான நிலையத்தில் பிளயர் தம்பதிகளுக்கு வரவேற்பு

புதுடில்லி,செப்.8

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள் ளார்.

நேற்று முன்தினம் இரவு புதுடில்லி வந்து சேர்ந்த பிளயருக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரொனி பிளயர் தமது இப்பயணத்தின் போது, குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சந்தித்து இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்துவார். (8)

# செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர்; ஆதாரங்கள் கண்டுபிடிப்பு!

## அமெ.விஞ்ஞானி தெரிவிக்கிறார்

டப்ளின்,செப்.8

செவ்வாய்க் கிரகத்தில் மணல் மேடுகளுக்கு அடியில் அதிக அளவில் தண்ணீர் பனிக் கட்டியாக உறைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானி மேரி புர்க் தெரிவித்துள்ளார்.

செவ்வாய்க்கிரகத்தில் உயிரினம் வாழ்வதற்குத் தேவையான இயற்கை சூழ்நிலை நிலவுகிறதா என்பதை கண்டறிவதற்காக விண்கலங்கள் அனுப்பப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், அமெரிக்காவில் அரிசோனா மாநிலம் டஸ்கனில் உள்ள கிரக அறிவியல் மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானி டாக்டர் மேரி புர்க் இங்கிலாந்து சென்றார்.

அங்கு அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

செவ்வாய்க் கிரகத்தில் மண்மேடுகளுக்கு அடியில் பனிக்கட்டிகள் இருப்பதற்கான ஆதாரத்தை நான் கண்டுபிடித்துள்ளேன். இதன்மூலம் மனித இனம் அந்தக் கிரகத்தில் வாழமுடியும்.

செவ்வாய்க்கிரகத்தில் உள்ள சில இராட்சத மணல் மேடுகளின் கீழே 50 சதவீதம் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரம் கிடைத்துள்ளது.

இந்தக் கிரகத்தில் உள்ள மிகப்பெரிய மணல் மேடுகளில் ஒன்று 475 மீற்றர் உயரமும், 6.5 கிலோமீற்றர் அகலமும் உடையது. இந்த மணல்மேடுகள் சகாரா பாலைவனத்து மணல் மேடுகள் போல அல்ல.

இந்த மணல் மேடு கள் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன் உருவானவை- என்றார். (8)


# நேபாள அமைதி முயற்சிக்கு உதவி செய்ய ஐ.நா. தயார்

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகளின் பிரச்சினைக்குப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு உதவுவதற்கு தாம் தயாராக உள்ளதாக ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள் ளார்.

அதில் அமைதி முயற்சிக்கு உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் இதைச் சம்பந்தப் பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் தெரிவித்துள்ளதாகவும் கூறியுள்ளார். (8)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying



Head office
No.500,Galle Road, Wellawatte, Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road, Jaffna. Tel:021-2226242 Fax:021-2225600
Branch
No:14,New Market Building Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road, Trincomalee.
Tel:026-2221519 Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


# பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் கட்டுமானப் பணிகள் தொடரும்

## இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு



ஜெருசலேம்,செப்.8

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் உள்ள குடியிருப்புப் பகுதியில் கட்டுமானப் பணிகள் தொடரும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

பிரதமர் ஏரியல் ஷெரோன் ஜெருசலேமில் கடந்த திங்கட்கிழமை இரவு தமது கட்சியைச் சேர்ந்த மாநகராட்சித் தலைவர்கள், துணை மேயர்கள் கூட்டத்தில் பேசினார். அப்போது மேற்கண்ட தகவலை அவர் தெரிவித்தார்.

கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதா? வேண்டாமா என்று யோசிக்கும் பேச்சுக்கே இடமில்லை. கட்டுமானப் பணிகள் அவசியம். அதுபற்றிப் பேசிக்கொண்டு இருக்காமல் செயலில் நேரடியாக இறங்குவோம். - என்றார். (8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பண்ணாகம் அமரர்

**பண்டிதர் அ.ஆறுமுகம்**

தோற்றம்: 16.12.1917 மறைவு 08.09.2004

பண்டிதர் ஐயாவின் விசவத்தனை முருகன்
பிள்ளைத் தமிழ் என்றும் எங்கள் நினைவில்.

*பண்ணாகம், சுழிபுரம்.* **நினைவுச் சபையார்.**

(சி/45051)(32-17-45)

---

நினைவில் நீங்கா

## ஏழாண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 1957 - 09 - 17



இறைவன் அடியில் 1998 - 09 - 08

**அமரர் வேலுப்பிள்ளை யோகநாதன்**

*(காவலாளர் - விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி)*

அன்பால் அரவணைத்து ஆதரவு மொழிபேசி
பண்புள்ளவனாய் எம்மை வளர்க்க - உறுதியுடன்
எம்முடன் இருந்த எம் இனிய சித்தப்பாவே!
பாதியிலே ஏன் பறந்தீர்?- நாம்
பண்பாளராய் வருவோம் எனத்தெரிந்தா!!

**மனைவி, சகோதரர், பெறாமக்கள்.**

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. (39667)(46-32-17-45)

---

## முதலாம் ஆண்டு நினைவினில்...

பிறப்பு 07 . 06 . 1938



இறப்பு 20 . 08 . 2004

**திருமதி ஐயாத்துரை இரத்தினேஸ்வரி**

*சேய்படும் துயரமெல்லாம் சற்று அறிகிலையோ
நிலையான வாழ்வுக்காய் இந்த ஞாலத்தே பிறந்து
நிலையின்றி வாடுகின்றோம் எம்நிலை பாரம்மா!
மதியில்லை மனதில் உறுதியில்லை
விதியோடும் வாழ்க்கையில் அமைதியில்லை
கதியின்றி வாடுகின்றோம் பெற்ற தாயின்றி.*

**உங்கள் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.**

*'துரை அகம்',
அல்வாய்.* (39693)(32-17-45)

---

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் மா.விஜயகாந்தன்**

*(இலங்கை வங்கி,யாழ்ப்பாணம்)*

மண்ணில் 22-04-1949 விண்ணில் 25-09-2003

அறிவினை எமக்கு ஊட்டி
இமைபோல் எமைக்காத்து
இமயமென துணையிருந்த உங்களை
அழைத்திட்ட கயவன் யாரப்பா?
கடமையில் கண்ணியமாய்
கடமையாற்றினீர்கள்
உங்கள் இலட்சியம் எங்கள் கைகளில்
அதை நிறைவேற்றுவோம் பக்குவமாய்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

32/1 குமாரசாமி வீதி,
கந்தர்மடம். (39659)(46-32-17-45)

**மனைவி, பிள்ளைகள்.**

---

## தேவை

*எமது நிறுவனத்திற்கு சிட்டை எழுதுநர், விற்பனையாளர், காசாளர் (அனுபவமுள்ள, அனுபவமற்றவர்கள்) மற்றும் லொறிச் சாரதி, றக்சாரதி (5 வருட அனுபவமுள்ளவர்கள்) தேவை. நேரில் வரவும்.*

தொடர்பு:
**பேப்பர் ஹவுஸ்,**
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/45065)(32-17-45)

---

## தேவை

*தனியார் ஸ்தாபனமொன்றுக்கு O/L சித்தியடைந்த பெண்பிள்ளை ஒருவரும், கட்டடப் பொருள் விற்பனை நிலையத்திற்கு கணக்கு வேலை, களஞ்சியக்கணக்கு வேலை தெரிந்த ஒரு ஆண் லிகிதரும் தேவை.*

தொடர்பு:
**சுமன் தொலைத்தொடர்பகம்**
670, ஆலடிச்சந்தி, ஒட்டுமடம்.
யாழ்ப்பாணம்.
T.P.: 021-222-2851

(39714)(46-32-17-45)

---

## ராஜபக்ஷவின் முடிவு; மனோகணேசன் சீற்றம்

கொழும்பு, செப்.8

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸவின் கைகளைப் பிடித்துக்கொண்டு நாட்டைப் பேரழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல முனைகின்றார். சிறுபான்மை இனத்தவர்களின் அடிப்படை உரிமைகளுக்கும், அபிலாஷைகளுக்கும் ஒட்டுமொத்தமாக வேட்டுவைக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் போக்கை ஜனாதிபதியும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

- இப்படிக் கூறுகின்றார் மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன்.

ஜே.வி.பியினருடன் பிரதமர் மேற்கொண்டுள்ள 12 அம்ச உடன்பாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே மனோகணேசன் மேற்கண்டவாறு கூறினார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றையாட்சி முறையின் கீழ் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்பதை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்நாட்டு மக்கள் மட்டுமல்ல சர்வதேச சமூகமும் ஒற்றையாட்சி முறையை ஏற்கனவே நிராகரித்து விட்டனர்.

வளர்ந்து வரும் இலங்கையை மீண்டும் அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும் வகையிலும் பாரிய யுத்தம் ஒன்றுக்கான முன் ஏற்பாடாகவுமே இக்கூட்டு ஒப்பந்தம் அமைந்துள்ளது. இராணுவ நடவடிக்கைகளுக்கான முஸ்தீபுகள் பாரிய யுத்த அழிவுக்கே நாட்டை இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகம் இல்லை என்றார் அவர். (க-3)

## சாவகச்சேரி நகரில் 'சுப்பர் மாக்கெற்' திறப்பு

சாவகச்சேரி, செப்.8

சாவகச்சேரி நகரில் 'சிற்றி சென்ரர் சுப்பர் மார்க்கெற்' கடந்த 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜினால் சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம், நிலையப் பொறுப்பாளர் குகநேசன், நிர்வாகி பாலசுப்பிரமணி[illegible]ன்மராட்சி 521 ஆவது கட்டளைத் [illegible]யம், [illegible] குணசேகரா உட்பட தளபதி - பிரிகேடிய[illegible] வர்த்தகப் பிரமுகர்கள் பொதுமக்கள் [illegible] பலர் கலந்து கொண்டனர். (த-31)

## சனசமூக நிலைய கட்டடத்துக்கு அடிக்கல்

சாவகச்சேரி, செப்.8

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையக் கட்டடம் சுமார் 19 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இருமாடிகளைக் கொண்டதாக இந்தச் சனசமூக நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கட்டடத்திற்கான நிதியை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பிரதிநிதி க. மகேந்திரன் கருத்துரை வழங்கினார்.

இக்கட்டடப்பணி அறவழி நிலையத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் கடந்த வாரம் அறவழி ஸ்தாபகர் எஸ். சச்சிதானந்தத்தால் சம்பிரதாயபூர்வமாக நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகள், அறவழி நிலைய பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-31)

---

*நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு*
*வடக்கு - கிழக்கு மாகாணசபை*
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் - II (நீகோட் - II)
*நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி*
*ஆ.அ.வ கடன் இல:-2168 - சிறீ (எஸ்எவ்)*

## கேள்வி அறிவித்தல் - இல. 54

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD- II) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதிபிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில்தருநராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | KN/NECORD- II/ AG/02 | கிளிநொச்சி, கமநல அபிவிருத்தி பயிற்சி நிலைய நிர்மாணமும் மாவட்ட காரியாலய நிர்மாணமும் | M5 கட்டடங்கள் | 153,000/- |
| 02. | MN/NECORD- II/ ED/06 | மன்னார், மடு வலய காரியாலயத்திற்கு 170'X25' கொண்ட இருமாடிகளை கொண்ட கட்டட புனர் நிர்மாணம் | M5 கட்டடங்கள் | 113,070/- |
| 03. | NEP/NECORD-II/ ID/01 | திருகோணமலை உப்புவெளி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய மூன்று மாடி நிர்மாணம் | M4 கட்டடங்கள் | 260,000/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே. நி. ஒ.ச.) உறுப்பினராக (ICTAD உடன் M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்டதிருப்திகரமான சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்ட வாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பானமேலதிகதகவல்களை **திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலையில்** பெற்றுக்கொள்ளலாம்.
(தொலைபேசி:. 026-222 7434, பக்ஸ்: 026-222 7401.
இணையத்தள முகவரி: **www.necord.org.**
ஈமெயில் **necord.@ sltnet.lk**)
6. கேள்வி ஆவண[illegible]ளை 13.09.2005 இலிருந்து 27.09.2005 வரை [illegible] வேலை நாள் காலை 9.30 மணி[illegible]லிருந்து மாலை 3[illegible]மணிவரை [illegible]ளிக்கப்படாத கட்டணத்தின் மேற்படி அலுவலகத்திலிருந்து [illegible] கொள்ள[illegible]தின் கொடுப்பனவு ரூபா 5,000 ஐச் செலுத்திப் பெற்[illegible]லாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் **தலைவர், திட்ட கேள்வி[illegible]ச் சபை, நீகோட், 55 கந்தசுவாமி கோயில் வீதி, திருகோண மலை** என்ற விலாசமிடப்பட்டு 04.10.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்
9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 27.09.2005ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
தலைவர், கேள்விச்சபை,
வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம், (சி-44903)
55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை. (21.32.17.45)

# அதிகாரப் பரவலின் கீழேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு!

## ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு, செப்.8

இலங்கை இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.



ஒற்றையாட்சியின் கீழேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்ற ஜே.வி.பியின் நிபந்தனையைப் பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியாகி உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 54ஆவது கட்சி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நேற்றுமுன்தினம் கொழும்பு கெம்பல் மைதானத்தில் இந்த மாநாடு வெகுகோலாகலமாக நடைபெற்றது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் திரண்டு வந்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் பொரளை, மருதானை, நகரசபைத் திடல் ஆகிய பகுதிகளிலிருந்து ஊர்வலமாகக் கெம்பல் மைதானத்தைச் சென்றடைந்தனர்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவைத்தெரிவித்துப் பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். பிரதமரின் உருவப்படங்களைத் தாங்கிய அலங்கார ஊர்திகளும் ஊர்வலத்தில் இடம்பெற்றிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டையொட்டி கொழும்பின் பல வீதிகள் நேற்றுமுன்தினம் போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்தன. இதனால் காலி வீதியிலும், ஹைலெவல் வீதியிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இந்தச் சம்மேளனத்தையொட்டி கெம்பல் மைதானத்தை அண்டிய பகுதிகளில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆரின் காலத்திலேயே தமிழ்மக்களின் மீது போர் திணிக்கப்பட்டது. அதனாலேயே அவர்கள் இன்று வரை போராடி வருகின்றனர்.

நாட்டின் இனப்பிரச்சினை மோசமடைவதற்கு ஐ.தே.கவே காரணமாக இருந்தது. எமது அரசு அதனைத் தணிப்பதற்கான முயற்சிகளையே மேற்கொண்டது. ஏற்கனவே ஏற்பட்ட காயத்துக்கு மருந்து தடவும் பணியையே நாங்கள் செய்தோம். நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அதிகாரப் பரவலாக்கல் ஒன்றே வழி. போர் அதற்கான தீர்வு அல்ல. எனவேதான் எமது அரசு புலிகளுடனான சமாதான முயற்சிகளை ஆரம்பித்தது.

அதன் பின்னர் ஐ.தே.கட்சி புலிகளுடன் செய்துகொண்ட போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை நிவர்த்தி செய்யவேண்டும். அது குறித்து விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சு நடத்தவுள்ளோம். அதற்கான இடம் மட்டும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை. விரைவில் அந்தப் பணிகள் நிறைவு பெறும். - என்றார் ஜனாதிபதி. (க-3)



சுதந்திரக் கட்சியின் 56 ஆவது மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பு கெம்பல் மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது. மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமரும் ஜனாதிபதி வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷவும் அளவளாவும் காட்சி.

# ஜே.வி.பியுடனான கொள்கைகள் தேர்தலுக்கு மட்டுமானவையாம்!

## சொல்பவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, செப்.8



ஜனாதிபதித் தேர்தலின்போது ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தாலும் அக்கட்சியுடன் இணக்கம் கண்டு வகுக்கப்பட்ட கொள்கைகள் தேர்தலுக்கானவை மட்டுமே என்று தெரிவித்திருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அந்தக் கொள்கைகளை வைத்துத் தம்மை இனவாதியாகநோக்கக்கூடாதென்றும் அவர் கேட்டிருக்கிறார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து, ஜனாதிபதித் தேர்தலையொட்டி அறிவித்துள்ள கொள்கைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், ''பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ போர் முரசறைகிறார்'' என்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து, நேற்றுமுன்தினம் மாலை ஜோசப் பரராஜசிங்கத்துடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தாலும் தாம் இனவாதக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதில்லையென்று உறுதி கூறியிருக்கிறார்.

தேர்தலுக்காக மட்டுமே தாம் ஜே.வி.பியினருடனும் ஹெல உறுமயவினருடனும் ஒப்பந்தங்களைச் செய்துள்ளார் எனவும்-

இவை தேர்தல் வாக்குறுதிகள் தான் என்றும் குறிப்பிட்டுள்ளார் பிரதமர். இந்த விடயங்கள் தொடர்பான தனது சொந்த நிலைப்பாட்டைத்தான்விரைவில் பகிரங்கமாக அறிவிப்பார் எனவும் கூறியிருக்கிறார்.

பொதுக்கட்டமைப்பு மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் என்பன குறித்துப் பிரதமர் ஜே.வி.பியினருடன் இணக்கம் கண்டுள்ள நிலைப்பாடு பற்றித் தனது கடும் அதிருப்தியை ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. இந்தத் தொலைபேசி உரையாடலின்போது பிரதமரிடம் தெளிவாக வெளிப்படுத்தினார் என்று அவரே தெரிவித்தார். (க-3)

## ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதற்கான

# பிரதமரின் நிலைப்பாட்டால் இடதுசாரிக்கட்சிகள் அதிர்ச்சி!

கொழும்பு, செப்.8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்களால் முன்வைக்கப்பட்ட 12 நிபந்தனைகளையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டிருப்பது பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கொள்கையுடைய கட்சித் தலைவர்களை அதிர்ச்சியும் கவலையும் அடையச் செய்திருக்கிறது.

ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் முன்வைத்த முக்கியமான தேசியப் பிரச்சினையுடன் தொடர்புடைய பல நிபந்தனைகளைப் பிரதமர் மஹிந்த ஏற்றுக்கொண்டுவிட்டார்.

இந்தநிலையில், ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பன பிரதமரின் இந்தப் புதிய நிலைப்பாட்டினால் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்திருக்கின்றன.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்த லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கியஸ்தரும் விஞ்ஞானதொழில்நுட்ப அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண, இந்த நிலைமை குறித்துப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் முக்கிய பேச்சு களைத் நடத்தப்போகிறார் எனக் கூறினார்.

அமைதி முயற்சிகள் எந்தவகையிலும் பாதிக்கப்படக் கூடாதென்பதில் தமது கட்சி மிக உறுதியாக உள்ளதெனக் கூறிய அவர், அவை பற்றியே தமது கட்சியினர் பிரதமருடன் முக்கியமாகப் பேசவுள்ளனர் எனவும் கூறினார்.

இதேவேளை, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான டியூ குணசேகர, இந்தவிடயம் பற்றித் தாம் முழுமையாக அறியாமலிருப்பதால் உடனடியாகக் கருத்துத் எதனையும் வெளியிட முடியாதெனக் கூறினார். ஆனாலும், அமைதி முயற்சிகளுக்குப் பாதிப்பு ஏற்படுவதை ஏற்கமுடியாதெனவும் அவர் குறிப்பிட்டார். (க-3)

# மஹிந்தவை ஆதரிப்பதென பிக்குகள் முன்னணியும் முடிவு

கொழும்பு, செப். 8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதென தேசிய பிக்குகள் முன்னணியும் அறிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஆளுமையும் சக்தியும் உள்ளவராக மஹிந்த காணப்படுகின்றார் என்பதால் ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரிக்கத் தமது கட்சி முடிவு செய்தது என்று அதன் தலைவர் வண. தாம்பர அமிதூ தேரர் தெரிவித்தார்.

''காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப இந்த நாட்டில் துணிச்சல் மிக்க தலைவர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய ஆளுமையும் சக்தியும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிகின்றது. எதிர்காலத்தில் அவரைச் சிறந்த தலைவராக்க முடியும். எனவேதான், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை ஆதரிக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.'' - என்றார் வண. தாம்பர அமிதூ தேரர்.

(க-3)

## இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில்

# தேவையேற்படின் ஐ.நா. தலையிடும்!

## கோபி அனானின் விசேட பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தேவையான - போதிய - கவனத்தை ஐக்கிய நாடுகள்சபை செலுத்துமென்று ஐ.நா. பொதுச் செயலாளரின் பிரதிநிதி பிரேஹ்மி ஜே.வி.பியினரிடம் தெரிவித்திருக்கிறார். தேவைப்படும்போது ஐ.நா. இந்த விவகாரத்தில் தலையிடும் என்றும் தமது கட்சிப் பிரதிநிதிகளிடம் கூறியதாக ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே.வி.பியின் அரசியல் தலைமையகத்தில் கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் ஆகியோரை பிரேஹ்மி நேற்றுமுன்தினம்சந்தித்துப் பேசினார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை, பொதுக்கட்டமைப்பு விவகாரம், போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நடைமுறையாக்கம் என்பன உட்படப் பல முக்கிய விடயங்கள் குறித்து இந்தப் பேச்சின்போது ஆராயப்பட்டுள்ளது. இந்தவிடயங்களில் தமது நிலைப்பாட்டை ஜே.வி.பியினர் விளக்கினர்.

இலங்கை அமைதி முயற்சிகளில் ஐ.நா. தலையீடு பற்றியும் இங்கு விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இலங்கைப் பிரச்சினைத் தீர்வில் தேவைப்படின் தலையிடுவதற்கு ஐ.நா. தயாரென்றும், ஆனால், உடனடியாக அது இடம்பெறாதென்றும் பிரேஹ்மி ஜே.வி.பி. தலைவர்களிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் இது தொடர்பாக யோசிக்க முடியுமென்றும் ஐ.நா. பிரதிநிதி தெரிவித்தார் என ஜே.வி.பி. வட்டாரங்கள் கூறின. (க-3)

# தொடரும் தாக்குதல்களை அடுத்து திருமலையில் பாதுகாப்புத் தீவிரம்!

தோப்பூர், செப்.8

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற தொடர்ச்சியான தாக்குதல்களை அடுத்து திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மத்தி மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களில் இராணுவத்தினரும் பொலீஸாரும் அதிகமாகக் குவிக்கப்பட்டு சோதனைகளும் கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் வீதி வீதியாக இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். முக்கியமான சந்தி, கடைத்தெரு மற்றும் பாடசாலைகளின் முன்பாகவும் இராணுவத்தினரும் பொலீஸாரும் காவலரண்களை அமைத்து இரவு பகலாகப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சந்தேகத்துக்குரிய வாகனங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. முகம் தெரியாத வகையில் தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோர் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இதனால், இம்மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. பிரதான நகரம் மற்றும் பொதுச்சந்தை என்பவற்றில் மக்கள் நடமாட்டம் முன்னரை விடக் குறைவாகக் காணப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகின்ற இராணுவத்தினரும் பொலீஸாரும் குண்டு துழைக்காத ஆடையணிந்து காணப்படுகின்றனர். விடுமுறைக்குச் செல்லும் படையினர் இராணுவத் தொடரணியாகப் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்படுகின்றனர். (க-3)

### வங்கியில் வைப்பிலிட எடுத்துச்செல்லப்பட்ட ரூ. 25 லட்சம் கொள்ளை!

கொழும்பு, செப். 8

கொஸ்கம பகுதியில் வங்கியில் வைப்பிலிடுவதற்கென எடுத்துச்செல்லப்பட்ட 25 லட்சம் ரூபா பணம் ஆயுதமுனையில் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து வங்கியில் வைப்பிலிடுவதற்காகப் பணத்தை வானொன்றில் எடுத்துச்சென்ற சமயம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று கூறப்பட்டது. மற்றொரு வானில் வந்த கொள்ளையர்கள் ஆயுதத்தைக் காட்டி மிரட்டி பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று பொலீஸார் கூறினர். அவர்கள் தப்பிச் சென்றபோதுதுப்பாக்கியால்சுட்டபடியேசென்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

கொஸ்கமை பொலீஸார் இந்தச் சம்பவம் குறித்துத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்கு பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படை யில் தெரிவானோரில் எஞ்சிய பகுதியினரின் பெயர்களும், பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டோரின் பெயர்களும் கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப் படையில் தெரிவுசெய்யப்பட்டோரில் ஒருபகுதியினரின் பெயர்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

பரு/ 6586 திருமதி. செல்லம்மா பிள்ளையினார்
பரு/ 6609 திரு. அப்பர் லிங்கசாமி
பரு/ 6610 திருமதி. இரத்தினம் இராசகோபால்
பரு/ 6624 திருமதி. வள்ளிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி
பரு/ 6625 திருமதி. இரத்தினம் சுப்பிரமணியம்
பரு/ 6631 திருமதி. கனகாம்பிகை தம்பு
பரு/ 6656 திரு. கஸ்பார் அந்தோனிப்பிள்ளை
பரு/ 6660 திருமதி. மங்களாதேவி வேலாயுதபிள்ளை
பரு/ 6664 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
பரு/ 6671 திருமதி. செல்லக்கண்டு இரத்தினம்
பரு/ 6687 திருமதி. இரத்தினேஸ்வரி வேலுப்பிள்ளை
பரு/ 6688 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
பரு/ 6690 திரு. வைரவிப்பிள்ளை இராமலிங்கம்
பரு/ 6708 திருமதி. முத்தம்மா தியாகராசா
பரு/ 6727 திருமதி. இலட்சுமி வடிவேலு
பரு/ 6731 திருமதி. இராசம்மா சிங்காரம்
பரு/ 6734 திரு. கந்தசாமி வேலும்மயிலும்
பரு/ 6735 திருமதி. நாகபூசணி தங்கராசா
பரு/ 6755 திரு. செல்லையா நல்லதம்பி
பரு/ 6756 திரு. கணேசபிள்ளை தாமோதரம்பிள்ளை
பரு/ 6763 திருமதி. கனகம்மா சின்னத்தம்பி
பரு/ 6766 திரு. முருகேசு சுப்பிரமணியம்
பரு/ 6773 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
பரு/ 6780 திரு. தம்பையா ஜெகநாதன்
பரு/ 6790 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
பரு/ 6807 திருமதி. வள்ளிப்பிள்ளை கணபதிப்பிள்ளை
பரு/ 6811 திருமதி. பாறுபதிப்பிள்ளை குமாரசாமி
பரு/ 6831 திரு. நமசிவாயம் சண்முகநாதன்
பரு/ 6837 திரு. மனவல் சிங்கராசா
பரு/ 6860 திரு. மயில்வாகனம் துரைசிங்கம்
பரு/ 6875 திருமதி. பகவதி சின்னத்துரை
பரு/ 6878 திரு. முருகன் மார்க்கண்டு
பரு/ 6879 திரு. செல்வவினாயகம் சின்னரெத்தினம்

**பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு**
**குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்**

பரு/ 80 திரு. சச்சிதானந்தம் இரத்தினசிகாமணி
பரு/ 203 திரு. தியாகராசா சிவகுமார்
பரு/ 240 திருமதி. பாலநந்தினி மகாதேவன்
பரு/ 261 திரு. கனசுந்தரம் அழகானந்தசுந்தரம்
பரு/ 275 திரு. நடராசா இராமச்சந்திரன்
பரு/ 322 திருமதி. கலாராணி ஸ்ரீகணேசமூர்த்தி
பரு/ 647 திருமதி. மகேஸ்வரி யோதிசங்கர்
பரு/ 795 திரு. சபாரத்தினம் சிவாஜிகணேசன்
பரு/ 818 திருமதி. சந்திராணி நவரட்ணம்
பரு/ 881 திரு. கிருஷ்ணபிள்ளை சுந்தரலிங்கம்
பரு/ 1014 திரு. கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
பரு/ 1160 திரு. நல்லதம்பி வேலும்மயிலும்
பரு/ 1466 திரு. கந்தசாமி திருநாவுக்கரசு
பரு/ 1672 திருமதி. விஜயகுமாரி சுதாகர்
பரு/ 1735 திரு. விநாயகமூர்த்தி பாலசுப்பிமணியம்
பரு/ 1827 திருமதி. மாதற்கரசி செல்லச்சாமி
பரு/ 1828 திரு. கோபாலசாமி சற்குணபாலன்
பரு/ 2090 திருமதி. தெய்வானைக்கண்டு விசாகரெத்தினம்
பரு/ 2293 திருமதி. மீனாட்சி வல்லிபுரம்
பரு/ 2394 திருமதி. சிவக்கொழுந்து சிவஞானசுந்தரம்
பரு/ 2419 திருமதி. ஆனந்தநாயகி சிதம்பரப்பிள்ளை
பரு/ 2548 திரு. விஸ்வலிங்கம் சுப்பிரமணியம்
பரு/ 2576 திரு. சின்னையா அருள்யோகஜெயம்
பரு/ 2674 திருமதி. ஜெயலட்சுமி சிதம்பரநடராசா
பரு/ 2684 திரு. தம்பிராசா அரியகுணராசா
பரு/ 2727 திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
பரு/ 2768 திரு. சுப்பன் நல்லையா
பரு/ 2872 திருமதி. பத்மாவதி கிருஷ்ணகுமார்
பரு/ 3120 திருமதி. லோகினி சிற்பரசிகாமணி
பரு/ 3125 திருமதி. ரகுவதி துரைராஜா
பரு/ 3272 திரு. வினாயகமூர்த்தி சிறிஸ்கந்தராசா
பரு/ 3360 திருமதி. மகேஸ்வரி தங்கவேலாயுதம்
பரு/ 3439 திரு. தம்பு இராசா
பரு/ 3615 திரு. தங்கராஜா கங்காதரன்
பரு/ 3723 திருமதி. சிவபாக்கியம் முருகேசு
பரு/ 3753 திரு. திருச்செல்வம் திருநேத்திரன்
பரு/ 3795 திரு. தம்பிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
பரு/ 4030 திரு. வைரமுத்து சுப்பிரமணியம்
பரு/ 4062 திரு. கணபதிப்பிள்ளை யோகநாதன்
பரு/ 4246 திரு. பாலசிங்கம் பாக்கியகுமார்
பரு/ 4259 திருமதி. மேரிபிளஞ்சாட் பீற்றர்துரைராசா
பரு/ 4273 திரு. அருணாசலம் துரைராசா
பரு/ 4343 திருமதி. சிவமணிதேவி கணபதிப்பிள்ளை
பரு/ 4441 திரு. சின்னத்துரை பதுமநாபன்.
பரு/ 4457 திருமதி. யோகேஸ்வரி அரியரத்தினம்
பரு/ 4539 திருமதி. தங்கம்மா குமாரசாமி
பரு/ 4675 திரு. சிதம்பரப்பிள்ளை சண்முகலிங்கம்
பரு/ 4678 திரு. கந்தையா கிருஷ்ணபிள்ளை
பரு/ 4696 திரு. கணபதி சிவஞானேஸ்வரன்
பரு/ 4760 திருமதி. இந்தரராணி பிரபாகரன்
பரு/ 4763 திருமதி. இராசமணி சிவலிங்கம்
பரு/ 4798 திரு. வேலுப்பிள்ளை பரமானந்தம்
பரு/ 4802 திரு. சவரிமுத்து லூத்மரியநாயகம்
பரு/ 4867 திரு. சுவானி தேவசகாயம்
பரு/ 4872 திரு. விஜயரட்ணம் நந்தகுமார்
பரு/ 5169 திரு. மயில்வாகனம் பாலசுவேந்திரன்
பரு/ 5250 திருமதி. சின்னாச்சிப்பிள்ளை வைரமுத்து
பரு/ 5738 திரு. வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
பரு/ 5741 திருமதி. சுதந்திராதேவி மனோகரன்
பரு/ 5848 திரு. சுப்பிரமணியம் சிவநேசன்
பரு/ 5890 திருமதி. நாகபூசனியம்மா பெரியதம்பி
பரு/ 5934 திருமதி. சுசீலா நடராசா
பரு/ 6015 செல்வன். நவரத்தினம் றீஸ்வரன்
பரு/ 6079 திருமதி. புஸ்பராணி குமாரசாமி
பரு/ 6199 திரு. நாகன் இராசையா
பரு/ 6204 திருமதி. தங்கராணி தர்மகுலசிங்கம்
பரு/ 6434 திரு. செல்லத்துரை பாலகிருஷ்ணன்
பரு/ 6733 திருமதி. சிவதேவி இராசகுமார்

**கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு**
**முப்பின் அடிப்படையில் தெரிவானோா**

க/ 4 திருமதி. தங்கம்மா பஞ்சாட்சரம்
க/ 18 திரு. வேலுப்பிள்ளை கனகசபை
க/ 24 திருமதி. தங்கம்மா வேலுப்பிள்ளை
க/ 49 திரு. ஐயாத்துரை மார்க்கண்டு
க/ 56 திரு. சின்னையா மயில்வாகனம்
க/ 64 திருமதி. செல்லம்மா சிவப்பிரகாசம்
க/ 66 திருமதி. சிவக்கொழுந்து சுப்பிரமணியம்
க/ 77 திரு. ஆழ்வாப்பிள்ளை வீரகத்தி
க/ 89 திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம்
க/ 92 திரு. கணபதிப்பிள்ளை பொன்னையா
க/ 105 திருமதி. கனகம்மா வல்லிபுரம்
க/ 110 திரு. சித்தர் வீரசிங்கம்
க/ 111 திரு. வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம்
க/ 117 திரு. ஆறுமுகம் கந்தையா
க/ 118 திரு. கணபதி சிதம்பரப்பிள்ளை
க/ 119 திருமதி. இலட்சுமிப்பிள்ளை சடாரணமூர்த்தி
க/ 130 திரு. சிதம்பரப்பிள்ளை சிற்றம்பலம்
க/ 142 திரு. கணபதிப்பிள்ளை செந்தியா
க/ 155 திருமதி. பொன்னம்மா பொன்னம்பலம்
க/ 156 திரு. கந்தையா இரத்தினசிங்கம்
க/ 166 திரு. முருகேசு கந்தப்பு
க/ 170 திரு. புதியார் கிருஷ்ணபிள்ளை
க/ 178 திருமதி. பாறுபதி செல்லத்துரை
க/ 191 திரு. கந்தன் கிட்டிணன்
க/ 197 திருமதி. தங்கம்மா செவ்வந்திநாதன்
க/ 204 திரு. தம்பையா துரைராசா
க/ 214 திரு. சின்னக்குட்டி நல்லதம்பி
க/ 227 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
க/ 235 திரு. வேலன் கந்தன்
க/ 243 திரு. பழனியர் அமிர்தலிங்கம்
க/ 277 திருமதி. இலட்சுமி ஆறுமுகம்
க/ 279 திரு. முருகேசு ஸ்ரீபத்மநாதன்
க/ 283 திரு. கிறிஸ்தோபர் ஞானப்பிரகாசம்
க/ 292 திருமதி. இலட்சமிப்பிள்ளை சின்னத்துரை
க/ 293 திரு. ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை
க/ 297 திரு. முருகேசு தியாகராஜ்
க/ 298 திரு. சரவணமுத்து தாமோதரம்
க/ 320 திரு. சிலம்பு வீரகத்தி
க/ 353 திருமதி. சின்னம்மா சின்னத்தம்பி
க/ 363 திருமதி. இராசம்மா சண்முகம்
க/ 379 திருமதி. செல்லம்மா சுந்தரம்
க/ 412 திரு. வேலுப்பிள்ளை ஆறுமுகம்
க/ 413 திருமதி. மகேஸ்வரி சபாபதி
க/ 430 திருமதி. பொன்னம்மா கந்தப்பு
க/ 433 திருமதி. சிவக்கொழுந்து கந்தையா
க/ 435 திருமதி. சிவக்கொழுந்து கந்தையா
க/ 456 திருமதி. சீதேவி வேலன்
க/ 462 திருமதி. வள்ளியம்மை வேலுப்பிள்ளை
க/ 463 திரு. சிதம்பரப்பிள்ளை கந்தப்பு
க/ 482 திருமதி. இலட்சுமிப்பிள்ளை குணரத்தினம்
க/ 536 திரு. கந்தப்பு குமாரசாமி
க/ 546 திருமதி. மரியமுத்து அந்தோனி
க/ 558 திரு. சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை
க/ 562 திருமதி. இலட்சுமி பஞ்சநாதன்
க/ 563 திரு. சின்னவன் வடிவேலு
க/ 582 திரு. வீரகத்தி சிற்றம்பலம்
க/ 604 திருமதி. மாணிக்கம் சிவஞானம்
க/ 613 திரு. சின்னத்தம்பி தங்கராசா
க/ 614 திரு. ஆழ்வாப்பிள்ளை சதாசிவம்
க/ 621 திரு. தம்பையா முத்தையா
க/ 625 திருமதி. அம்பிகை துரை
க/ 640 திரு. உலகப்பர் மூத்ததம்பி
க/ 643 திருமதி. இலட்சுமிப்பிள்ளை வேலுப்பிள்ளை
க/ 649 திரு. வேலுப்பிள்ளை தியாகராசா
க/ 656 திருமதி. சுகிர்தம்மா சரவணமுத்து
க/ 667 திரு. இராமநாதர் மயில்வாகனம்
க/ 670 திருமதி. வள்ளி ஆழ்வார்
க/ 683 திரு. கந்தசாமி தர்மராஜா
க/ 684 திரு. சிங்காரவேலு சுந்தரம்பிள்ளை
க/ 687 திரு. ஆழ்வார் சிதம்பரப்பிள்ளை
க/ 698 திருமதி. பரமேஸ்வரி சிவபாதசுந்தரம்
க/ 705 திரு. சிவம்பு சுந்தரம்
க/ 708 திரு. க.சின்னத்தம்பி சிதம்பரநாதன்
க/ 714 திரு. சின்னையா கந்தசாமி
க/ 720 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
க/ 723 திருமதி. அழகேஸ்வரி அருளையா
க/ 749 திரு. முருகர் செல்லப்பாக்கியம்
க/ 750 திரு. தம்பாப்பிள்ளை ஆறுமுகம்
க/ 752 திரு. நீலக்குட்டி முத்துக்குமாரு
க/ 768 திரு. சின்னத்தம்பி தங்கராசா
க/ 779 திருமதி. சிவமலர் கந்தசாமி
க/ 786 திருமதி. பத்தினிப்பிள்ளை சின்னத்தம்பி
க/ 787 திருமதி. குஞ்சுப்பிள்ளை சின்னையா
க/ 789 திரு. முருகேசு மயில்வாகனம்
க/ 796 திரு. கந்தையா முருகேசு
க/ 801 திரு. தாமு சின்னத்தம்பி
க/ 820 திருமதி. இலட்சுமி கிருஷ்ணன்
க/ 821 திருமதி. புவனேஸ்வரிஅம்மா சபாரத்தினக்குருக்கள
க/ 825 திரு. சிதம்பரி இரத்தினம்
க/ 832 திருமதி. திலகவதி வினாயகமூர்த்தி
க/ 847 திரு. சிற்றம்பலம் செல்லத்துரை
க/ 854 திரு. சின்னத்தம்பி முருகேசு
க/ 855 திரு. சின்னத்தம்பி முருகேசு
க/ 864 திரு. திருஞானசம்பந்தமூர்த்தி சிவலோகநாதன்
க/ 872 திரு. தம்பையா வேலாயுதம்
க/ 876 திருமதி. சிவக்கொழுந்து மார்க்கண்டு
க/ 883 திரு. நல்லதம்பி கனகசபை
க/ 884 திரு. நல்லதம்பி கனகசபை
க/ 887 திரு. வேலுப்பிள்ளை பாலசிங்கம்
க/ 888 திருமதி. இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி
க/ 911 திரு. கனகசபை ஆறுமுகம்
க/ 923 திரு. கந்தையா பழனிப்பிள்ளை
க/ 928 திரு. கதிர்காமு முருகேசு
க/ 945 திரு. சின்னையா சிவானந்தம்
க/ 947 திருமதி. செல்லம்மா தம்பிப்பிள்ளை
க/ 961 திருமதி. இலட்சுமிஅம்மா தெட்சணாமூர்த்திஐயர்
க/ 979 திரு. சூரிப்பிள்ளை வைரமுத்து
க/ 987 திரு. கந்தையா கதிர்காமு
க/ 991 திரு. சின்னையா கிருஷ்ணபிள்ளை
க/ 997 திருமதி. பரமேஸ்வரி வல்லிபுரம்
க/ 998 திரு. கனகசபை செல்வராசா
க/ 1000 திருமதி. சிவயோகம் திருஞானசுந்தரம்
க/ 1006 திரு. ஆழ்வாப்பிள்ளை சின்னத்துரை
க/ 1020 திரு. கந்தர் வேலாயுதம்
க/ 1023 திரு. அப்பையா கணபதிப்பிள்ளை
க/ 1026 திரு. சின்னையா துரைச்சாமி
க/ 1054 திருமதி. பத்தினிப்பிள்ளை சிவபாதசுந்தரம்
க/ 1060 செல்வி. சசிமதி சிவானந்தன்
க/ 1070 திரு. கந்தப்பு தியாகராசா
க/ 1072 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
க/ 1087 திரு. சின்னப்பா தணிகாசலம்
க/ 1095 திருமதி. சிவபாக்கியம் தம்பிப்பிள்ளை
க/ 1098 திருமதி. மனோரஞ்சிதம் தவசீலன்
க/ 1105 திரு. அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை
க/ 1113 திரு. சண்முகம் செல்லையா
க/ 1115 திருமதி. சின்னத்தங்கம் வைரமுத்து
க/ 1123 திரு. கந்தர் ஆழ்வாப்பிள்ளை
க/ 1125 திருமதி. இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம்
க/ 1126 திருமதி. மனோன்மணி செல்வராசா
க/ 1137 திருமதி. சிவதேவரத்தினம் தவபாலசிங்கம்
க/ 1145 திரு. பொன்னுச்சாமிகுருக்கள் சிவராசசர்மா
க/ 1153 திரு. வல்லிபுரம் செல்லையா
க/ 1175 திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
க/ 1183 திரு. கனகசபை பத்மநாதன்
க/ 1186 திருமதி. இராசம்மா முருகேசு
க/ 1202 திரு. சின்னத்தம்பி முருகன்
க/ 1207 திருமதி. சின்னப்பிள்ளை கிட்டிணபிள்ளை
க/ 1209 திருமதி. இராசமணி சிவலிங்கம்
க/ 1218 திருமதி. நாகேஸ்வரி சிவபாதசுந்தரம்
க/ 1257 திரு. நல்லதம்பி முருகேசு
க/ 1277 திரு. இராசன் விஜயரத்தினம்
க/ 1282 திருமதி. இரத்தினம செல்லத்துரை
க/ 1283 திருமதி. தங்கமணி வைரமுத்து
க/ 1287 திரு. ஆறுமுகம் இராசரத்தினம்
க/ 1300 திரு. ஆறுமுகம் இராசரத்தினம்
க/ 1307 திரு. இராசையா குலசிங்கம்
க/ 1320 திரு. காசிப்பிள்ளை கந்தசாமி
க/ 1321 திருமதி. தங்கமுத்து கந்தசாமி
க/ 1325 திரு. கணபதிப்பிள்ளை கந்தவனம்
க/ 1348 திரு. ஆறுமுகம் கதிரவேல்
க/ 1363 திரு. சுப்பர் கணபதிப்பிள்ளை
க/ 1367 திருமதி. இராஜேஸ்வரி புலேந்திரா
க/ 1369 திரு. வடிவேலு மகேஸ்வரன்
க/ 1372 திரு. சிவகுரு வேலும்மயிலும்
க/ 1384 திரு. திருநாவுக்கரசு பொன்னுத்துரை
க/ 1395 திரு. கதிர்காமு கிருஷ்ணபிள்ளை
க/ 1396 திருமதி. குஞ்சியார் கந்தசாமி
க/ 1404 திரு. தம்பிப்பிள்ளை துரைராஜா
க/ 1410 திரு. தங்கராஜா ரமணன்
க/ 1422 திருமதி. மாணிக்கம் பொன்னையா
க/ 1423 திருமதி. மாணிக்கம் பொன்னையா
க/ 1425 திரு. நடராசா கனகசிங்கம்
க/ 1441 திரு. குமாரவேலு நடராசா
க/ 1446 திரு. கந்தையா நமசிவாயம்
க/ 1453 திருமதி. பொன்னம்மா சண்முகராசா
க/ 1461 திரு. தாமு வீரசிங்கம்
க/ 1462 திருமதி. அன்னபாக்கியம் கோபாலு
க/ 1484 திரு. சின்னத்தம்பி வேலாயுதம்
க/ 1492 திரு. அருணாசலம் திருநாவுக்கரசு
க/ 1498 திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை
க/ 1501 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
க/ 1502 திரு. ஆழ்வார் மயில்வாகனம்
க/ 1505 திரு. சின்னத்தம்பி முத்தையா
க/ 1507 திரு. சின்னயா இராசமசாமி
க/ 1518 திரு. வேலுப்பிள்ளை சண்முகசுந்தரம்
க/ 1526 திரு. பொன்னம்மா கணபதிப்பிள்ளை
க/ 1543 திரு. வேலுப்பிள்ளை தங்கராஜா
க/ 1556 திருமதி. இராசம்மா தாமோதரம்பிள்ளை
க/ 1560 திரு. சரவனமுத்து செல்வநாயகம்
க/ 1581 திரு. செல்லையா இராஜா
க/ 1588 திரு. சின்னையா கந்தையா
க/ 1597 திருமதி. புவனேஸ்வரி சுப்பிரமணியம்
க/ 1604 திருமதி. வள்ளிநாச்சி கந்தவனம்
க/ 1610 திரு. சுப்பிரமணியம் சோமசுந்தரம்
க/ 1611 திரு. கந்தையா முத்துலிங்கம்
க/ 1619 திருமதி. நாகம்மா மாணிக்கம்
க/ 1621 திருமதி. சரஸ்வதி சிதம்பரநாதன்
க/ 1631 திருமதி. சரஸ்வதி கதிரேசு
க/ 1648 திரு. வினாசித்தம்பி செல்வநாயகம்
க/ 1651 திருமதி. செல்லம்மா சின்னையா
க/ 1659 திரு. முருகேசு கந்தசாமி
க/ 1662 திருமதி. அன்னப்பிள்ளை இரத்தினம்
க/ 1670 திரு. கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
க/ 1671 திரு. கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
க/ 1672 திருமதி. செல்லம்மா கனகரத்தினம்
க/ 1673 திருமதி. பரமேஸ்வரி மார்க்கண்டு
க/ 1674 திரு. கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை
க/ 1682 திரு. வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
க/ 1686 திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம்
க/ 1691 திரு. கந்தவனம் இராஜதுரை
க/ 1693 திருமதி. தெய்வானை கணபதிப்பிள்ளை
க/ 1696 திரு. எகாம்பரம் சோமசுந்தரம்
க/ 1699 திரு. சிற்றம்பலம் சின்னத்துரை
க/ 1704 திரு. முருகப்பர் வேலுப்பிள்ளை
க/ 1716 திருமதி. தெய்வானை பொன்னுச்சாமி

(9ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

க/ 1721 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
க/ 1724 திரு. கந்தவனம் தங்கவேலு
க/ 1731 திருமதி. விக்டோரியாராணி விக்ர்இம்மானுவேல்
க/ 1732 திருமதி. மகேஸ்வரி பாலசிங்கம்
க/ 1739 திரு. கதிரேசு சபாரத்தினம்
க/ 1741 திருமதி. எலிசபேத் அந்தோனிப்பிள்ளை
க/ 1743 திரு. கதிரேசு சபாரத்தினம்
க/ 1754 திரு. வீரகத்தி வேலும்மயிலும்
க/ 1760 திருமதி. சின்னம்மா கிட்டிணபிள்ளை
க/ 1761 திருமதி. பார்வதி அரசரத்தினம்
க/ 1766 திருமதி. கனகம்மா நடராசா
க/ 1776 திருமதி. தங்கம்மா கந்தையா
க/ 1777 திரு. கோவிந்தன் கோவிந்தராசா
க/ 1780 திருமதி. மனோரதி சண்முகதாஸ்
க/ 1785 திரு. சின்னத்தம்பி நமசிவாயம்
க/ 1804 திருமதி. நாகம்மா திருநாவுக்கரசு
க/ 1810 திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம்
க/ 1820 திரு. கந்தவனம் நடராசா
க/ 1821 திரு. கந்தவனம் நடராசா
க/ 1832 திரு. கந்தவனம் நடராசா
க/ 1838 திரு. வாரித்தம்பி தம்பிப்பிள்ளை
க/ 1841 திரு. வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை
க/ 1855 திருமதி. இராசம்மா நாகமணி
க/ 1866 திரு. கதிரவேலு மயில்வாகனம்
க/ 1875 திரு. நாகலிங்கம் அழகானந்தம்
க/ 1878 திரு. சின்னையா நடராசா
க/ 1881 திரு. கந்தவனம் தங்கவேலு
க/ 1888 திருமதி. இராசேஸ்வரி வேதாரணியம்
க/ 1900 திருமதி. விவேகமணி இராசநாயகம்
க/ 1912 திருமதி. செல்லாச்சி சின்னத்துரை
க/ 1927 திருமதி. இராஜேஸ்வரி சிவசுப்பிரமணியம்
க/ 1948 திரு. தம்பையா சுப்பிரமணியம்
க/ 1951 திருமதி. வள்ளியம்மை சின்னத்தம்பி
க/ 1957 திருமதி. செல்லம்மா ஏரம்பமூர்த்தி
க/ 1958 திரு. முருகேசு இராசையா
க/ 1960 திரு. வல்லிபுரம் முருகேசு
க/ 1963 திரு. கந்தையா சின்னையா
க/ 1964 திருமதி. கனகம்மா தம்பிப்பிள்ளை
க/ 1971 திரு. வல்லிபுரம் சிவகுருநாதன்
க/ 1975 திரு. வையிரவிப்பிள்ளை கனகசிங்கம்
க/ 1986 திரு. ஆறுமுகம் கனகரத்தினம்
க/ 2000 திருமதி. தங்கம்மா வேதநாயகம்
க/ 2012 திருமதி. சேதுப்பிள்ளை தர்மராசா
க/ 2028 திரு. வேலுப்பிள்ளை வைரமுத்து
க/ 2036 திருமதி. சிவக்கொழுந்து கந்தவனம்
க/ 2045 திருமதி. சின்னம்மா வேலுப்பிள்ளை
க/ 2055 திருமதி. அக்கினேஸ் யோசப்மேரி
க/ 2063 திரு. கந்தையா சுப்பிரமணியம்
க/ 2075 திருமதி. இராசம்மா ஐயாத்துரை
க/ 2082 திரு. கந்தசாமி பேரம்பலம்
க/ 2089 திரு. கந்தையா பஞ்சாட்சரம்
க/ 2104 திருமதி. செல்லம்மா கிட்டினபிள்ளை
க/ 2113 திரு. இராசதுரை பத்மநாபன்
க/ 2116 திரு. குமாரசாமி சண்முகலிங்கம்
க/ 2130 திருமதி. தில்லைச்சி சிவப்பர்
க/ 2160 திருமதி. சிதம்பரம் நாகரட்ணம்
க/ 2164 திரு. கணபதிப்பிள்ளை கார்த்திகேசு
க/ 2167 திரு. கணபதி சேனாபதி
க/ 2171 திரு. வல்லிபுரம் சின்னத்தம்பி
க/ 2183 திரு. வல்லிபுரம் காசிப்பிள்ளை
க/ 2191 திருமதி. சங்குபதி நாகமுத்து
க/ 2202 திருமதி. சரஸ்வதி திருநாவுக்கரசு
க/ 2206 திரு. இளையவன் சபாபதி
க/ 2222 திரு. தாமு குண்டுமணி
க/ 2223 திரு. கணபதிப்பிள்ளை நமசிவாயம்
க/ 2254 திரு. சிவகுரு நடராசா
க/ 2255 திரு. கதிரவேலு சுப்பிரமணியம்
க/ 2261 திரு. சிவகுரு பொன்னம்பலம்
க/ 2265 திருமதி. நல்லநாயகம் சிவரத்தினம்
க/ 2272 திரு. நாகமுத்து சுப்பிரமணியம்
க/ 2276 திரு. வேலுப்பிள்ளை நவரத்தினம்
க/ 2277 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
க/ 2292 திரு. ஆறுமுகம் கந்தசாமி
க/ 2306 திரு. சிவஞானம் பத்மநாதன்
க/ 2325 திருமதி. மங்கையற்கரசி வியாகேசு
க/ 2326 திருமதி. பரமேஸ்வரி மகேந்திரம்
க/ 2334 திரு. சபாபதிப்பிள்ளை முருகேசு
க/ 2342 திரு. முத்து விநாயகமூர்த்தி
க/ 2344 திரு. கணபதி இராசா
க/ 2346 திரு. கந்தையா மகாலிங்கம்
க/ 2349 திரு. சின்னவன் முருகுப்பிள்ளை
க/ 2351 திரு. கனகர் மாற்க்கண்டு
க/ 2352 திரு. வெள்ளையன் சிவலிங்கம்
க/ 2356 திரு. கனகசபை அருளானந்தம்
க/ 2358 திரு. செல்லையா நடராசா
க/ 2364 திரு. மயில்வாகனம் சிவபாதசுந்தரம்
க/ 2367 திரு. தம்பிப்பிள்ளை பசுபதி
க/ 2373 திருமதி. பூபதி குணரத்தினம்
க/ 2384 திரு. கோபால் துரைசிங்கம்
க/ 2388 திரு. விஸ்வலிங்கம் மோகனகுரு
க/ 2399 திருமதி. பாய்க்கியம் குணரத்தினம்
க/ 2413 திரு. நல்லதம்பி கந்தசாமி
க/ 2430 திரு. கிட்டிணபிள்ளை சின்னராசா
க/ 2437 திருமதி. பந்கயச்செல்வம் ஐயாமுத்து
க/ 2445 திருமதி. சீரங்கம் கந்தையா
க/ 2462 திருமதி. சிவக்கொழுந்து பாலசிங்கம்
க/ 2502 திரு. பொன்னையா கந்தையா
க/ 2504 திருமதி. சிவக்கொழுந்து பூபாலகிட்டுணர்
க/ 2506 திருமதி. காந்திஅம்மா சின்னராசா
க/ 2521 திருமதி. பூரணம் தர்மராஜா
க/ 2529 திருமதி. இராஜேஸ்வரி குமாரசாமி
க/ 2531 திருமதி. இராஜேஸ்வரி குமாரசாமி
க/ 2539 திரு. இராமலிங்கம் சின்னராசா
க/ 2541 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
க/ 2545 திருமதி. காசிப்பிள்ளை நாகலிங்கம்
க/ 2554 திருமதி. வாலாம்பிகை பாலசுப்பிரமணியம்

க/ 2564 திருமதி. மகிமலீலா கணேசலிங்கம்
க/ 2569 திருமதி. சிவக்கொழுந்து வேலுப்பிள்ளை
க/ 2575 திரு. மாணிகம் சபாபதி
க/ 2580 திருமதி. சின்னத்தங்கம் கதிரவேல்
க/ 2595 திருமதி. குஞ்சுப்பிள்ளை பாலசிங்கம்
க/ 2608 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
க/ 2611 திரு. சீனியன் சின்னையா
க/ 2633 திருமதி. சின்னக்கண்டு கந்தையா
க/ 2637 திரு. கணபதிப்பிள்ளை சுந்தரவடிவேல்
க/ 2641 திருமதி. தங்கமணி சுப்பிரமணியம்
க/ 2644 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
க/ 2648 திரு. சின்னத்துரை செல்லையா
க/ 2655 திருமதி. மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
க/ 2666 திரு. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு
க/ 2676 திருமதி. சரஸ்வதி திருநாவுக்கரசு
க/ 2677 திரு. கனகசபை நல்லையா
க/ 2693 திருமதி. லோரு சூசன் அதிசயம்இராசா
க/ 2701 திரு. இளையகுட்டி ஆறுமுகம்
க/ 2708 திரு. சுப்பிரமணியம் நாகலிங்கம்
க/ 2709 திருமதி. இன்பநிதி சித்திரவேல்
க/ 2715 திருமதி. பொன்னம்மா சின்னத்துரை
க/ 2716 திரு. முத்து இராஜதுரை
க/ 2717 திரு. வேலுப்பிள்ளை இரத்தினம்
க/ 2718 திருமதி. பாறுபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
க/ 2719 திரு. முருகுப்பிள்ளை நாகலிங்கம்
க/ 2727 திரு. வேலுப்பிள்ளை இராமலிங்கம்
க/ 2734 திருமதி. தவமணி நாகமணி
க/ 2741 திரு. முருகுப்பிள்ளை துரைச்சாமி
க/ 2742 திரு. தாமோதரம்பிள்ளை முத்துவேல்
க/ 2743 திரு. வேலுப்பிள்ளை நாகரத்தினம்
க/ 2745 திருமதி. தங்கமணி மகேஸ்வரன்
க/ 2754 திரு. நடராசா அம்பிகாபதி
க/ 2760 திரு. ஐயாக்குட்டி சபாரத்தினம்.
க/ 2763 திருமதி. ராசபூபதி கந்தசாமி
க/ 2775 திருமதி. அருமைமுத்து குலத்துங்கம்
க/ 2779 திருமதி. குணவதி சோமசுந்தரம்
க/ 2781 திரு. செல்லையா சிவகுரு
க/ 2793 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
க/ 2807 திரு. கிருஷ்ணர் தங்கவேலாயுதம்
க/ 2810 திருமதி. சீதேவன் கிருஷ்ணசாமி
க/ 2825 செல்வி. இராசமணி செல்லப்பா
க/ 2828 திரு. சுப்பிரமணியம் நவரத்தினம்
க/ 2842 திருமதி. பாய்க்கியம் இரத்தினம்
க/ 2843 திருமதி. செல்[illegible]வியம் செல்வராசா
க/ 2845 திருமதி. செல்லமுத்து சுவாமிநாதன்
க/ 2855 திரு. கதிரிப்பிள்ளை பாலசிங்கம்
க/ 2872 திரு. சின்னையா கந்தசாமி
க/ 2877 திரு. இராமுப்பிள்ளை நாகலிங்கம்
க/ 2884 திருமதி. மகேஸ்வரி பழனிப்பிள்ளை
க/ 2888 திருமதி. சரஸ்வதி அருளம்பலம்
க/ 2890 திரு. கணபதி கிட்டினன்
க/ 2896 திரு. வல்லிபுரம் நல்லதம்பி
க/ 2906 திரு. அருணாசலம் சதாசிவம்
க/ 2915 திரு. முருகேசு தங்கவேல்
க/ 2919 திரு. முருகேசு தர்மலிங்கம்
க/ 2925 திரு. கந்தப்பர் சுப்பிரமணியம்
க/ 2926 திரு. செல்லையா சண்முகநாதன்
க/ 2935 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்
க/ 2938 திரு. சுவக்கீன் தேவசகாயம்அந்தோனி
க/ 2945 திரு. வீரகத்தி பாலசிங்கம்
க/ 2947 திருமதி. பாக்கியம் ஆறுமுகம்
க/ 2950 திரு. சின்னைய்யா கிருஷ்ணபிள்ளை
க/ 2954 திரு. கனகசபை பாலகிருஷ்ணராசா
க/ 2961 திருமதி. மகேஸ்வரி சந்தரசேகரம்
க/ 2968 திரு. கதிர்காமு கந்தசாமி
க/ 2971 திரு. வேலுப்பிள்ளை தங்கராஜா
க/ 2982 திருமதி. கமலம் செல்லத்துரை
க/ 2995 திரு. கந்தன் குமாரன்
க/ 2997 திருமதி. தெய்வானை சின்னையா
க/ 2999 திருமதி. பவளம்மா தட்சணாமூர்த்தி
க/ 3006 திரு. கந்தையா கதிர்காமத்தம்பி
க/ 3007 திருமதி. மகேஸ்வரி மயில்வாகனம்
க/ 3015 திரு. ஆறுமுகம் சின்னத்துரை
க/ 3020 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
க/ 3021 திரு. கார்த்திகேசு நல்லதம்பி
க/ 3033 திரு. நல்லதம்பி குருநாதபிள்ளை
க/ 3034 திரு. சின்னக்குட்டி இராசப்பு
க/ 3035 திரு. ஆறுமுகம் நடராசா
க/ 3043 திரு. கந்தையா குமரகுரு
க/ 3077 திரு. அஸாறியஸ் பர்ணாந்து
க/ 3094 திரு. நல்லதம்பி வசந்தன்
க/ 3100 திரு. ஆழ்வாப்பிள்ளை தம்பையா
க/ 3110 திரு. செல்லமுத்து சத்தியபாஸ்கரநாதன்
க/ 3126 திருமதி. சறோஜினிதேவி செல்லத்துரை
க/ 3133 திரு. வெள்ளையன் துரைராஜா
க/ 3138 திருமதி. சின்னவி நல்லதம்பி
க/ 3139 திருமதி. மகேஸ்வரி சிவக்கொழுந்து
க/ 3149 திருமதி. நவமணி வல்லிபுரம்
க/ 3158 திரு. சின்னவன் நாகமணி
க/ 3159 திரு. சின்னத்தம்பி நடராசா
க/ 3160 திரு. சின்னத்தம்பி நடராசா
க/ 3172 திரு. கணபதிப்பிள்ளை கனகரத்தினம்
க/ 3174 திருமதி. பொன்னம்மா சின்னையா
க/ 3176 திரு. கனகசபைக்குருக்கள்
வேதாரணியக்குருக்கள்
க/ 3179 திருமதி. சரஸ்வதி கனகசபை
க/ 3185 திரு. மயில்வாகனம் கதிரிப்பிள்ளை
க/ 3198 திரு. செல்லையா வாமதேவா
க/ 3205 திரு. சின்னையா விநாயகமூர்த்தி
க/ 3234 திரு. சின்னத்துரை தருமராசன்
க/ 3240 திருமதி. மகேஸ்வரி கந்தையா
க/ 3245 திருமதி. அன்னம்மா குருகுலசிங்கம்
க/ 3267 திரு. இளையதம்பி கணபதிப்பிள்ளை
க/ 3309 திரு. செல்லையா வாமதேவன்
க/ 3310 திரு. சபாபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
க/ 3314 செல்வி. யோகேஸ்வரி சின்னத்துரை
க/ 3329 திரு. மாணிக்கம் தியாகராசா

க/ 3337 திரு. நாகலிங்கம் கந்தையா
க/ 3353 திருமதி. பொன்னம்மா செல்லையா
க/ 3354 திரு. கதிரன் கற்கண்டன்
க/ 3369 திரு. சின்னப்பு வெள்ளைக்குட்டி
க/ 3374 திரு. கணபதிப்பிள்ளை சிவகுரு
க/ 3377 திரு. செல்லத்துரை தங்கராசா
க/ 3378 திரு. நல்லதம்பி நடராசா
க/ 3379 திருமதி. செல்லம்மா செல்லையா
க/ 3381 திரு. சின்னத்தம்பி கோபாலகிருஷ்ணபிள்ளை
க/ 3399 திருமதி. பொன்னம்மா சுப்பிரமணியம்
க/ 3406 திரு. முத்து கிருஸ்ணபிள்ளை
க/ 3411 திருமதி. இராசம்மா மயில்வாகனம்
க/ 3444 திரு. சிதம்பரம் குழந்தைவேலு
க/ 3449 திரு. வேலுப்பிள்ளை தர்மலிங்கம்
க/ 3450 திரு. சிதம்பரன் கந்தையா
க/ 3463 திரு. கந்தசாமி சுப்பிரமணியம்
க/ 3490 திரு. சரவணமுத்து கந்தையா
க/ 3495 திரு. வீரகத்திப்பிள்ளை இரத்தினம்
க/ 3496 திரு. காசியர் வேலுப்பிள்ளை
க/ 3500 திரு. சின்னத்தம்பி குட்டித்தம்பி
க/ 3504 திரு. ஆழ்வார் கணபதிப்பிள்ளை தம்பையா
க/ 3522 திரு. கதிரித்தம்பி கணபதிப்பளளை
க/ 3532 திரு. கிட்டினர் ஐயாத்துரை
க/ 3557 திரு. அரியகுட்டிப்பிள்ளை வைத்தீஸ்வரன்
க/ 3559 திரு. முருகர் கந்தையா ஆறுமுகம்
க/ 3565 திருமதி. விஜயலட்சுமி சிவகுருநாதன்
க/ 3577 திரு. கோபால் துரைசிங்கம்
க/ 3586 திரு. நவரத்தினம் பாலகிருஷ்ணன்
க/ 3595 திரு. சின்னத்தம்பி கந்தப்பு
க/ 3596 திரு. கணபதி குழந்தையன்
க/ 3599 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்
க/ 3600 திருமதி. சீரங்கம் முத்துத்தம்பி
க/ 3605 திரு. சின்னத்தம்பி திசைவீரசிங்கம்
க/ 3612 திரு. கந்தவனம் சின்னத்துரை
க/ 3619 திரு. குமாரசாமி சிவகுரு
க/ 3620 திரு. சின்னத்தம்பி சிதம்பரநாதன்
க/ 3624 திருமதி. இலெட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்
க/ 3626 திரு. கணபதிப்பிள்ளை விநாயகம்பிள்ளை
க/ 3630 திருமதி. சேதுநாயகம் சிவசுப்பிரமணியம்
க/ 3648 திரு. ஆறுமுகம் கந்தசாமி
க/ 3650 திருமதி. அன்னம்மா நடராசா
க/ 3656 திருமதி. சரஸ்வதி புவிராயரட்ணம்
க/ 3662 திரு. சின்னப்பொடி அப்புக்குட்டி
க/ 3663 திருமதி. குணமணி நல்லநாதன்
க/ 3675 திரு. முருகன் கந்தையா ஆறுமுகம்
க/ 3676 திரு. வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்
க/ 3684 திரு. செல்லையா இரத்தினசிங்கம்
க/ 3690 திரு. விசுவர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்
க/ 3707 திரு. சின்னையா கிருஷ்ணசாமி
க/ 3722 திரு. முருகேசு நாகராசா
க/ 3724 திரு. நாகன் நடேசு
க/ 3736 திருமதி. சின்னம்மா நடராசா
க/ 3743 திரு. நாகப்பர் சுப்ரமணியம்
க/ 3744 திருமதி. மகேஸ்வரி துரைராசா
க/ 3747 திரு. முத்தர் கதிரித்தம்பி
க/ 3748 திரு. முத்தர் கதிரித்தம்பி
க/ 3755 திரு. சிவகுரு கந்தவனம்
க/ 3756 திருமதி. செல்லம்மா நமசிவாயம்
க/ 3764 திருமதி. இராசம்மா சுப்பிரமணியம்
க/ 3766 திரு. சின்னத்தம்பி வடிவேல்
க/ 3772 திரு. சின்னத்துரை நடராசா
க/ 3775 திரு. கணபதி கிருஸ்ணபிள்ளை
க/ 3782 திரு. மயில்வாகனம் இராசரத்தினம்
க/ 3830 திரு. நாகநாதர் கதிரவேலு
க/ 3841 திரு. சுப்பையா யோகலிங்கம்
க/ 3842 திரு. சுப்பையா யோகலிங்கம்
க/ 3854 திரு. நிற்சிங்கம் சுந்தரசிங்கம்
க/ 3856 திரு. அப்புத்துரை நாகரத்தினம்
க/ 3859 திருமதி. இரத்தினம்மா தினகரிப்பிள்ளை
க/ 3868 திருமதி. பவளம் கணபதிப்பிள்ளை
க/ 3872 திரு. தம்பையா மாணிக்கம்
க/ 3880 திரு. தம்பு கனகராசா
க/ 3886 திரு. கந்தையா இரத்தினம்
க/ 3888 செல்வன். சின்னத்துரை நாகராசா
க/ 3889 திரு. இளையவன் நமசிவாயம்
க/ 3895 திருமதி. சிவக்கொழுந்து செல்வநாயகம்
க/ 3897 திரு. நாகநாதர் சின்னத்துரை
க/ 3899 திரு. தாமோதரம்பிள்ளை மயில்வாகனம்
க/ 3900 திரு. நாகப்பர் இலட்சுமணன்
க/ 3903 திரு. கந்தையா தம்பையா
க/ 3904 திரு. கந்தையா தம்பையா
க/ 3905 திருமதி. மங்கையர்க்கரசி நாகேந்திரம்
க/ 3906 திரு. கதிரவேலு கனகசிங்கம்
க/ 3910 திரு. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு
க/ 3933 திருமதி. செல்வராணி சிவானந்தசுந்தரம்
க/ 3935 திரு. முத்து தம்பிராசா
க/ 3957 திரு. கந்தையா தில்லையம்பலம்
க/ 3958 திரு. ஆறுமுகம் கணபதிப்பிள்ளை
க/ 3971 திரு. சின்னத்தம்பி நவரத்தினம்
க/ 3972 திருமதி. சித்திரம் கதிரவேலு
க/ 3985 திரு. கணபதிப்பிள்ளை கந்தவனம்
க/ 3999 திருமதி. அன்னம்மா கார்த்திகேசு
க/ 4009 திருமதி. ஈச்சம்மா மயில்வாகனம்
க/ 4024 திரு. கந்தர் கதிரேசு
க/ 4068 திரு. வேலுப்பிள்ளை நாகமுத்து
க/ 4090 திரு. ஐயா வேலுப்பிள்ளை
க/ 4100 திருமதி. தவனேஸ்வரி கனகரத்தினம்
க/ 4111 திருமதி. பொன்னம்மா குமாரசாமி
க/ 4114 திரு. வல்லிபுரம் கந்தசாமி
க/ 4140 திருமதி. நாகரத்தினம் மாணிக்கம்
க/ 4142 திரு. வாரி சரவணை
க/ 4147 திருமதி. இலட்சுமி நடேசன்
க/ 4152 திருமதி. சிவக்கொழுந்து சிவகுரு
க/ 4169 திரு. ஆழ்வாப்பிள்ளை தர்மலிங்கம்
க/ 4189 திரு. சின்னவன் சிவலிங்கம்
க/ 4191 திரு. சரவணை செல்லையா

(வளரும்)

யாழ்.வண். கிழக்கு, கலட்டி எச்சாட்டி

## ஸ்ரீ மஹாமாரி அம்பாள் தேவஸ்தானம்

*மேற்படி ஆலயத்திற்கு நித்திய, நைமித்திய பூசைக்கு* **குருக்கள்/பூசகர்** *தேவை. விட்டு வசதி செய்து தரப்படும்.*
***விண்ணப்பத்தினை 15.09.2005 இற்குமுன் விண்ணப்பிக்கவும்.***

பொ.மகேசலிங்கம்,
செயலாளர்.

**ஆலய பரிபாலனசபை**

(39712)(32-21-15-45)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
*16 - 05 - 1960*

ஆண்டவன் பாதத்தில்
*11 - 09 - 2002*



### திருமதி இரகுநாதன் ஜெயநாயகி

திதி: 08.09.2005

குடும்பத்தின் தெய்வமாய் இல்லத்தில் ஒளிவிளக்காய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அன்பூட்டி, அறிவூட்டி ஆதரவாயிருந்த தெய்வமே!
பிரிவு என்னும் ஆறாத்துயர் தந்து ஆண்டுகள்
மூன்றானாலும் என்றென்றும் மாறாத உள்ளத்துடன்
உங்கள் ஆத்மசாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

63, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி, குடியேற்றத்திட்டம்,
யாழ்ப்பாணம். T.P. 0777 111 021

பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள்.**

(39624)(32-21-15-45)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
30 - 03 - 1960

மறைவு
26 - 07 - 2005



### திருமதி வேதநாயகம் சரஸ்வதிதேவி (சோதி)

*45 நாள்கள் ஓடிப்போனதம்மா ஆறாது எம் துயரம்*
*அம்மா அழுதாலும் தீராதம்மா எம் துயர்*
*அம்மா எமக்கெல்லாம் வழிகாட்டிய தெய்வமே!*
*எனி எப்போ உம்மைக் காண்போம் தாயே!*

26.07.2005 அன்று அகால மரணமான எமது தெய்வத்தின் நினைவாக இன்று (08.09.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவுடன்:
**கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(39709)(32-21-15-45)

## ஜனாதிபதித் தேர்தல்: இ.தொ.காவுக்குள் இழுபறி நிலை

கொழும்பு, செப்.8

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் யாருக்கு ஆதரவளிப்பது என்பதில் கட்சிக்குள் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் நடைபெற்ற கட்சியின் தேசிய நிர்வாக சபைக்கூட்டம் எந்தவிதமான முடிவையும் எடுக்காமலேயே முடிவடைந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீ.ல.சு. கட்சி வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரில் யாரை ஆதரிப்பது என்பதில் அக்கட்சிக்கு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் எம்.பி. தலைமையில் கடந்த இரு நாள்களும் கட்சியின் உயர்மட்டக்குழுக் கூட்டம் மட்டக்குளியில் நடைபெற்றது. இதில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியே மிக முக்கியமாக அலசப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோருடன் கட்சியின் தேசிய நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

பிரதமருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஆதரவாக கட்சி முக்கியஸ்தர்கள் இருதரப்பாகப் பிளவுபட்டு நிற்பதால் யாரை ஆதரிப்பது என்பதை இக்கூட்டத்தில் தீர்மானிக்க முடியாதநிலை ஏற்பட்டது என கட்சியின் முக்கிய தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

எனினும், இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் மீண்டும் கூடி இது குறித்துப் பரிசீலனை செய்யப்படவுள்ளது - என்றும் -

ஆனால், அதற்கான திகதி நிர்ணயிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (க-3)

## புங்குடுதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்கக் கோரிக்கை

குருநகர், செப்.8

புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தரமாகப் பொறுப்பு வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கோரிக்கைவிடப்பட்டுள்ளது. இது தொடர்பான மகஜர் ஒன்றை புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக் குழந்தைகள் இல்லம் பணிப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளது.

மக்கள் மீண்டும் புங்குடுதீவுப் பகுதியில் மீளக் குடியேறி வருவதனால் நிரந்தரமாக வைத்தியர் ஒருவர் சேவையாற்ற வேண்டியது அவசியம் எனவும் மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (8-51)

## குடும்பப் பெண்ணைக் காணோம்!

குடும்பப் பெண் ஒருவரைக் காணவில்லையெனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புங்குடுதீவைச் சேர்ந்த 21 வயதுடைய பு.புஷ்பரூபி என்ற குடும்பப் பெண்ணே காணாமற் போனவராவார்.

கடந்த மாதம் 13ஆம் திகதி இரவு வீட்டில் இருந்து வெளியில் சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு காணாமற்போனோர் விசாரணை அதிகாரி செல்வி ரி.மொரின் கேட்டுள்ளார். (ஐ-7)

## கணனி கற்கைநெறியில் சர்வதேச அங்கீகாரம்

The Leading INDIAN IT College

FREE BOOKS FOR ALL STUDENTS

**GLOBAL VILLAGE COMPUTER EDUCATION**

(A Unit of Global Media Tech - India)

புதிய பிரிவுகள் ஆரம்பம்!!



*PROFESSIONAL TRAINING COURSES*

DIPLOMA IN OFFICE AUTOMATION
DIPLOMA IN COMPUTE APPLICATION
DIPLOMA IN WEB DESIGNING
DIPLOMA IN ENGINEERING DRAWING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN MULTIMEDIA
DIPLOMA IN E-COMMERCE
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
GLOBAL KIDS PROGRAMMING (STAGE I&2)
COMPUTERIZED ACCOUNTING

வார, வார இறுதி, மாலை, இரவு நேர வகுப்புக்கள்! பிரத்தியேக, குழு வகுப்புக்கள்!!

IMIS UK · Tally

eTouch COMPUTER SYSTEM

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA, SRI LANKA
Phone: 021 4590222 E-Mail: etouch@wow.lk Web: globalvillage-lanka.com

## 'பற்றிக் துணி' அலங்காரப் பயிற்சி

யாழ்ப்பாணம்,செப்8

மகளிர்அபிவிருத்தி நிலையம், மாதர் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு 'பற்றிக் துணி' அலங்காரப் பயிற்சி நெறியை நடத்தி வருகிறது.

அங்கத்தவர்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிப்பதற்காக நடத்தப்படும் இப்பயிற்சி நெறி கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

இப்பயிற்சி நெறியை மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் வைபரீதியாக ஆரம்பித்து வைத்தார். (எ-202)

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை

### வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம் (நீகோட்)

*நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி*
*ஆஅவ கடன் இல:-1846 - சிறீ (எஸ்எவ்)*

## கேள்வி அறிவித்தல் - இல. 55

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD - Ext) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| VA/NECORD-EXt/AG/01 | வவுனியா, மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் இரண்டு மாடிவிடுதிகள் கட்டட நிர்மாணம் | M4 கட்டடங்கள் | 200,080/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகோருவதற்குத் தகுதியுடையவர்கள்

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி. ஒ.ச.) உறுப்பினராக (ICTAD உடன் M7 இற்கு மேல் பதிவு செய்யாதவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்பதிகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை **55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலையில்** பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 026-222 7434 பக்ஸ்: 026-222 7401. இணையத்தள முகவரி www.necord.org. ஈமெயில் necord.@ sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 13.09.2005 இலிருந்து 27.09.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3.மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 5,000 ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் **தலைவர், திட்ட கேள்விச் சபை, நீகோட், 55 கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை** என்ற விலாசமிடப்பட்டு 04.10.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்
9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 27.09.2005ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
தலைவர், கேள்விச்சபை,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தி திட்டம்,
55, கந்தசுவாமி கோயில் வீதி, திருகோணமலை.

(சி-44904)
(21.15.45)

# கிளிநொச்சி மருதநகர் கிராமத்தில் தொல்லியல் பொருள் பலவும் மீட்பு

பரந்தன்,செப்.8

கிளிநொச்சி நகர்ப்புறப் பகுதியில் புதிதாக வெட்டப்பட்ட கிணறு ஒன்றிலிருந்து பழைமை வாய்ந்த தொல்லியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தத் தொல்லியல் பொருள்களை தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப் பணியகத்தினர் மீட்டுள்ளனர்.

கிளிநொச்சி, 4 ஆம் வாய்க்கால் பகுதியிலுள்ள மருதநகர் கிராமத்தில் பல காலமாக வசித்துவந்த மாரிமுத்து விசுவநாதன் குடும்பத்தினர் 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீளக் குடியேறினார். வீடு, கிணறு என்பன இராணுவத்தால் அழிக்கப்பட்டிருந்தன. அங்கு தற்போது புதிதாகக் கிணறு வெட்டியபோதே பழைமைவாய்ந்த தொல்லியல் பொருள்களைக் கண்டுபிடித்தனர்.


இந்தத் தகவலை அரும்பொருள் காப்பு நடுவப் பணியகத்துக்கு அறிவித்ததை அடுத்து அரும்பொருள் காப்பு நடுவப் பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் மற்றும் ந.குணரட்ணம் தலைமையிலான தொல்லியல் பொருள்கள் தேடல் குழுவினர் ஆய்வுகளை மெற்கொண்டனர்.

இதன்போது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எமது மூதாதையர் பாவித்த நான்கு கால்களை உடைய கருங்கல் அம்மி, சுடு மண்ணிலான மட்பாண்டங்கள், சமையல் பாத்திரங்கள், மணிகள், அணிகலன்கள் என்பவற்றைக் கண்டுபிடிததனர்.

தொல்லியல் பொருள்கள் மீட்பின்போது தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் மற்றும் பொதுமக்கள், அரும்பொருள் காப்பு நடுவப் பணியகத்தை சேர்ந்தவர்கள் எனப் பலரும் இருந்தனர்.

தமிழீழப் பகுதியில் இவ்வாறான தொல்லியல் பொருள்களை இனங்காணும்போது மக்கள் தேசநலன் கருதி, கிளிநொச்சி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள அரும்பொருள் காப்பகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப் பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் கேட்டுள்ளார். (த-352-204)





கிணறின் சுவரில், தொல்லியல் பொருள்களைத் தேடி ஆய்வு செய்ப்படுவதை முதல் படத்திலும் - கண்டெடுக்கப்பட்ட கருங்கல் அம்மியை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரனிடம் காணி உரிமையாளர் ஒப்படைப்பதையும் அருகில் தமிழீழ அரும்பொருள் காப்பு நடுவப் பணியகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் நிற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்:- பரந்தன் செய்தியாளர்)

## கட்டாக்காலி மாடுகளால் வட்டக்கச்சியில் தொல்லை!

பரந்தன்,செப்.8

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளமையால் விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

தற்போது சிறுபோக நெற்செய்கை அறுவடை முடிவுற்று சூடுமிதிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் மாடுகள் கட்டாக்காலிகளாக விடப்படுவதால் நெற்குவியல்கள் அழிவடைகின்றன.

எனவே, சம்பந்தப்பட்டோர் உடன் கவனமெடுத்துச் செயற்படவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த-352-202)

## ஆங்கில பாட அடைவு மட்டம் முல்லை. மாணவரிடம் வீழ்ச்சி!

ஒட்டுசுட்டான்,செப் 8

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாணவர்களின் ஆங்கில பாடத்தின் அடைவு மட்டம் வெகுவாக வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றது. பல ஆண்டுகாலமாக ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்று கல்விச் சமூகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்பட்ட போதும் போதியளவு ஆங்கில ஆசிரியர்கள் மேற்படி மாவட்டத்தில் நியமிக்கப்படவில்லை என்றும் மாணவர்களின் ஆங்கில பாட அடைவு மட்ட வீழ்ச்சிக்கு இதுவே காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(த-341-202)

## சாரணருக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

புதுக்குடியிருப்பு,செப்.8

சாரணருக்கான சின்னம் சூட்டும் வைபவம் அண்மையில் வட்டுவாகல் அ.த.க. பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அல்வீனுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சாரணர் உதவி ஆணையாளர் வே.ஜெயம்சபாபதி கலந்துகொண்டு சின்னம் சூட்டிக் கௌரவித்தார்.

(த353-202)

# முல்லைத்தீவுப் பாடசாலைகளுக்கு நிகொட் திட்டத்தின் கீழ் உதவிகள்

புதுக்குடியிருப்பு,செப்.8

'நிகொட் II' திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன என நிகொட் திட்டப் பணிப்பாளர் சி.இரகுநாதபிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

முல்லைத்தீவு, துணுக்காய் வலயக் கல்விப் பணிமனைகளின் முன்மொழிவுக்கு அமைவாக பாடசாலைகளுக்கு மாடிக் கட்டடங்கள், வகுப்பு அறைகள், ஆய்வுகூடம், ஆசிரியர் விடுதிகள் என்பன அமைக்கப்படவுள்ளன.

இதற்கென முல்லைத்தீவு வலயத்தில் உடையார் கட்டு ம.வி., வற்றாப்பளை ம.வி, இரணைப்பாலை ம.வி., பாரதி வித்தி., ஆனந்தபுரம் அ.த.க பாடசாலை, முல்லைத்தீவு இ.த.க. பாடசாலை ஆகியனவும்-

துணுக்காய் வலயத்தில் ஒட்டுசுட்டான் ம.வி.,பாண்டியன் குளம் ம.வி., துணுக்காய் அ.த.க.பாடசாலை ஆகியனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன - என்றார்.

(த-353-202)

# ஓமந்தைச் சாவடியில் கெடுபிடி: பயத்துடன் பயணிக்கும் மக்கள்

புளியங்குளம்,செப்.8

வவுனியா ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியில் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்பட்ட பின்னரே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய கெடு பிடிகளால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதோடு பெரும் பீதியுடனேயே பயணம் செய்கின்றனர் என் றும் கூறப்பட்டது.

அண்மையில் புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவி ஒருவரை விசாரித்த இராணுவத்தினர் அவரை அச்சுறுத்தினர் என்று கூறப்பட்டது.

இதனால், பெரும் பயத்துக்கு ஆளான அவர் தனது கல்வியைக் கூட இடை நிறுத்திவிட்டதாக அறியப்படுகின்றது.

(த)

## வன்னிச் செய்திகள்

# வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்தில் மைதானமும் நூலகமும் அமைப்பு

## சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் விளையாட்டு மைதானம், நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றிற்கான உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

வலுவிழந்த சிறுவர்களுக்காக நடத்தப்படும் இந்த இல்லத்தில் கற்கும் சிறார்களின் விளையாட்டு மற்றும் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் நோக்கில் மேற்படி திட்டத்திற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் நிதியுதவியை வழங்கியுள்ளது.

# பிரதேசசபையின் அனுமதி பெற்றே கட்டடங்களை அமைக்க வேண்டும்!

## கரைதுறைப்பற்று ஆணையாளர் அறிவுறுத்து

புதுக்குடியிருப்பு,செப்.8

கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் எல்லைக்குள் - பிரதேச சபையின் அனுமதியின்றி எவ்வித கட்டடங்களும் அமைக்கக் கூடாது என்று பிரதேச விசேட ஆணையாளர் இ.கிருஷ்ணபிள்ளை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்தத்தால் முல்லைத்தீவு நகரம் முழுமையாகவே அழிந்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் தாமே தமது வீடுகள், தொழில் நிறுவன ங்களை அமைத்து வருகின்றனர்.

இவர்கள் கட்டடங்கள் அமைக்கும் போது பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே செயற்படவேண்டும் - என்றார்.(த-353-202)

# நயினாமடு குடியிருப்புத் திட்டத்தில் வசதிகள் ஏதுமின்றி மக்கள் அவதி

புளியங்குளம்,செப்.8

வவுனியா வடக்கு, நயினாமடு குடியிருப்புத் திட்டத்தில் வாழும் குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றிப் பெரும்சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

1999 ஆ[illegible] ஆண்டு இராணுவத்திட[illegible]த்தில் 25 மிருந்து மீட்கப்பட்ட இப்பிர[illegible]ன்னன். குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வாழ[illegible]

அடிப்படைத் தேவைகளான குடிதண்ணீர், மலசலகூடம் போன்றவை இன்றி பல்வேறு சிரங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் சிறிய கொட்டில்களில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்கின்றனர்.

இந்த மக்களது பொருளாதார மேம்பாட்டில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அக்கறை கொண்டு செயற்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-355-202)





கே.கே.எஸ். கணனி நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் சி.தயானந்தா கணனி நிலையத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதையும் அருகில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி[illegible] கனகரத்தினம், புதுக்குடியிருப்புப் பிரசேத காவல்துறைப் பொறுப்பாளர் சந்திரகுமார், கணனி நிலைய நிர்வாகி சி.கோகுலன் ஆகி[illegible] [illegible] படத்திலும் - பயிற்சிபெற்ற மாணவி ஒருவருக்கு புதுக்குடியிருப்புப் பிரதேச காவல்துறைப் பரிசோதகர் [illegible] நிற்பதை [illegible] அருகில் உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.செல்வராசா நிற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். சான்றிதழ் வழங்குவதையு[illegible]

(படங்கள்: ந.விக்கினேஸ்வரன் புதுக்குடியிருப்புச் செய்தியாளர்.)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

குறோட்டன், பாம்ஸ், அரக்கெரியா, சைபிரஸ், றெசீனா, பாங்கொக் போகன்விலா (கடதாசிப்பூ), செவ்வரத்தை, முசந்தாஸ் (வெள்ளை, பிங்), அரலியா, றொரண்டா ஆகிய பூக்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாக்கியநாதன், 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 6563. (39627)

கடைக்கு உபயோகப்படுத்தக்கூடிய முதிரை மரத்திலான கண்ணாடிக் கதவுகளைக் கொண்ட மூன்று மர அலுமாரிகள் இலாச்சிகளுடன் கூடிய மரத்திலான இரண்டு மேசைகள் 3'x8' கதவுள்ள றாக்கைகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரமேஸ்குமார், 74/1, கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-222 5265. (39697)

## கடை விற்பனைக்கு

பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியிற் மாணவபேரவை முன்பாக திருநெல்வேலியில் கடை ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 3174041. (39721)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் Green Hospital இற்கு அருகில் இணுவில் வீதியில் 4½ பரப்புடன் கூடிய வீடு வளவு உடனடியாக விற்பனைக்குண்டு. வசதியான நிம்மதியான இடம். எவரும் தொடர்பு கொள்ளலாம். வீட்டுத்தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779084848, 0776648688, 021-2223484. (39701)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ஜெயபாலசிங்கம், 105, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி-44917)

## தவறிவிட்டது

01.09.2005 அன்று நல்லூர் சப்பரத் திருவிழா அன்று கோயில் பின்பக்க வீதியிலுள்ள ஐஸ்கிறீம் கடை மண்டலேஸ்வரன் இசைக்குழு கடையின் பெறுமதியான கமரா (படக்கருவி) படச்சுருளுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அதே கடையில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (39694)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974, கார்த்திகை இடபராசி, கிரகபாவம் 26, உயரம் 5' 4'', B.A. (புவியியல்) இலங்கை நிர்வாக சேவை A.G.A. மணப்பெண்ணுக்கும், 1977, அச்சுவினி மேடராசி, கிரகபாவம் 14½, உயரம் 5' 3'', B.Sc. (Civil Engineer) மணப்பெண்ணுக்கும் டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன், விரிவுரையாளர் மணமகன் தேவை தொடர்பு: சிவாலயா நல்லூர். T.P.: 222 7844. (39499)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், நோர்வே P.R, 1973, அச்சுவினி மேடராசி, உயரம் 5'7'', கிரகபாவம் 30¼, 7இல் செவ்வாய் Bio Engineering Computer Science மணமகனுக்கு அழகான விஞ்ஞானப் பட்டதாரி மணப்பெண்ணும், 1970, சுவிஸர்லாந்து P.Rஉள்ள, பூசம் கடகராசி, 40¾ கிரகபாவம், உயரம் 5'3', G.C.G A/L படித்த மணப்பெண்ணுக்கு பட்டதாரி உள்நாடு or சுவிஸ் மணமகன் தேவை. தொடர்பு: சிவாலயா நல்லூர்.
T.P.: 021-222 7844. (39696)

## வீடும் வளவும் விற்பனைக்கு

உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகிலும், உடுவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்னாள் வடக்குப் பக்கமாக அமைந்துள்ள தெருவை முகப்பாகக் கொண்ட நல்ல நிலையில் உள்ள வீடும் வளவும் உடன் விற்பனைக்குண்டு. இதன் விஸ்தீரணம் பரப்பு நிலை இலாச்சம் மூன்றே முக்கால் (3¾) தொடர்பு: இராசையா உதயன், உத்தமன் சிலையடி, ஏழாலை மேற்கு. T.P.: 0602 212933. (39722)

## தவறிவிட்டது

திருநாவுக்கரசு இந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (வெலிகந்தோட்டம், துன்னாலை வடக்கு என்ற முகவரியை உடையது) இல.570244159V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முதலாம் கட்டை பருத்தித்துறையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (39724)

## ஆள் தேவை

ஸ்ருடியோ வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.
வீடியோ, ஸ்ரில் படப்பிடிப்பாளர் தேவை அனுபவமுள்ளவர்கள், ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்
(39469) (21.15.34)
**ஊர்மிளா ஸ்ருடியோ**
3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
T.P.: 021-222 6587

---



உ

உரும்பிராய்
கருணாகரப் பிள்ளையார் கோயில்
## மகோற்சவ தினங்கள்

இன்று (08.09.2005) வியாழன் நண்பகல் 12 மணி கொடியேற்றம்

நாதஸ்வர இசை
இணுவில் ச.இராசன் குழுவினர்
இணுவில் ப.சிவதாஸ் குழுவினர்
கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினர்

16.09.2005 வெள்ளி பிற்பகல் 2 மணி - தேர்த் திருவிழா
17.09.2005 சனி பிற்பகல் 2 மணி - தீர்த்தத் திருவிழா

மகோற்சவ காலங்களில் மாலை வேளைகளில் சைவப் பிரசங்கம் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

உபயகாரர்கள் -
கருணாகரப்பிள்ளையார் கோயில் திருப்பணிச் சபையினர்.
உரும்பிராய் (39686)(21.34.15)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி **புஸ்பம் சந்திரபாலா**

"எங்கள் அம்மாவே அன்புத் தெய்வமே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
எந்நாளும் உங்கள் நினைவுநாளே எமக்கு"

இவரின் ஆன்ம சாந்திக்காக யாழ்/அருள் ஆச்சிரமத்தில் காலை 6.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கனடா.
T.P.: 416 283-3920 (39706) (21.34.15)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---


S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

## தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




Rediffusion DYR

## எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிகைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-lon
என்றும் முன்னணியில்

S-lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

# கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி; ஆவரங்கால் வி.க. சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.8

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்திய கரபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்களும் பரிசளிப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை இரவு இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றன. விவேகானந்தா சனசமூக நிலையத் தலைவர் எஸ்.தவராஜசிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மூன்றாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணிமோதியது. 2:1 என்ற செற் கணக்கில் 25:21, 23:25, 25:21 என்ற புள்ளி அடிப்படையில் அச்சுவேலி தோப்பு வாலிபர் வி.க. அணி வெற்றி பெற்று மூன்றாவது இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆவரங்கால் ம.வி.க. அணி 3:1 என்ற செற் கணக்கில் 25:20, 25:19, 26:28, 25:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொணடது.

இவ் ஆட்டங்களுக்கு நடுவர்களாக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர், எஸ். ரமணன், எஸ்.அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினர்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்துகொண்டார். (9-190)



சிப்பாப்வேயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'வீடியோகோன்' முத்தரப்பு இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுகளால் இந்திய அணியைத் தோற்கடித்துக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் நியூஸிலாந்து அணியையே படத்தில் காண்கிறீர்கள். (8)

### விசுவமடுப்பிரதேச

# முன்பள்ளி விளையாட்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது

புதுக்குடியிருப்பு, செப்.8

உடையார்கட்டு, விசுவமடுப் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள் உடையார்கட்டில் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை உடையார்கட்டு மகாவித்தியாலய அதிபர் சி.ராசா ஏற்றி வைக்க மங்களவிளக்கினை சமூகப் பொருளாதார அபிவிருத்தி வங்கி முகாமையாளர் மதன்ராஜ் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை உடையார்கட்டுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழன் ஏற்றிவைத்தார். தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் மூர்த்தியும் சமூகப்பொருளாதார வளர்ச்சி நிறுவனக் கொடியை இணைப்பாளர் யூட்டும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுக் கொடி, முன்பள்ளிகளின் மேம்பாட்டுக் கொடி, முன்பள்ளிகளின் கொடிகள் என்பன ஏற்றிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஒலிம்பிக் சுடரை சோழர் பூங்கா மாணவர்கள் ஏற்றிவைத்தனர். சத்தியப்பிரமாணத்தை ரூபன் முன்பள்ளி மாணவன் க.கஜிதன் செய்தார்.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வைத் தமிழீழ காவல்துறையின் ஆளனிப் பிரிவுப் பொறுப்பாளர் செந்தூரன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த விளையாட்டு விழாவில் பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெற்றது. (8-353-203)

## புளியங்கூடலில் விளையாட்டு விழா

ஊர்காவற்றுறை, செப்.8

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வழிகாட்டலில் ஊர்காவற்றுறைப் பிரதேசசபை, புளியங்கூடல் பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு விழவை நடத்தவுள்ளது.

இந்த விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோயிலடி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் ஏ.கணேசானந்த ராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தீவகக் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் க.கணபதி பிரதம விருந்தினராக் கலந்து கொள்கிறார். (9-16-203)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செப்.8

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதியாட்டங்கள் இன்று முதல் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது கால் இறுதி ஆட்டத் தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துப் பருத்தித்துறை சென்சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதும். (9-410)

# அனில் கும்ளே, சஹீர்கான் உட்பட 7 இந்திய வீரர்கள் சிம்பாப்பே பயணம்

அனில் கும்ளே, சஹீர்கான் உட்பட ஏழு இந்திய கிரிக்கெட் வீரர் கள் டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக சிம்பாப்வே சென்றுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணி சிம்பாப்வேயில் விளையாடுகிறது. முத்தரப்பு ஒரு நாள் தொடர் நேற்று முடிந்தது. அடுத்ததாக, சிம்பாப்வேக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடக்க உள்ளது.

முதல் டெஸ்ட் எதிர்வரும் 13ஆம் திகதியும் இரண்டாவது டெஸ்ட் 20ஆம் திகதியும் நடக்கிறது.

டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக அனில் கும்ளே, சஹீர் கான், லக்ஷ்மன், பாலாஜி, தினேஷ் கார்த்திக், கவுதம் காம்பிர் மற்றும் தீரஜ் ஜாதவ் ஆகிய ஏழு இந்திய வீரர்கள் மும்பையில் இருந்து நேற்று முன்தினம் அதிகாலை சிம்பாப்வே சென்றனர். (8)




# இலங்கையும் தென்னாபிரிக்காவும் சென்னையில் நவ. 16 இல் மோதும்

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளின் இந்திய சுற்றுப்பயண விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - தென்னாபிரிக்கா - இலங்கை ஆகியன பங்குபற்றும் முத்தரப்புத் தொடரில் தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையேயான ஒரு நாள் போட்டி சென்னையில் நடக்கிறது.

முத்தரப்புத் தொடரில் பங்கேற்க இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இந்தியா வருகின்றன. அடுத்தமாதம் இந்தியா வரும் தென் ஆபிரிக்க அணி, ஏழு ஒரு நாள் போட்டிகளில் விளையாடு கிறது. தென்னாபிரிக்கா அணி இலங்கையுடனான முதலாவது போட்டியை சென்னையில் சந்திக்கிறது. இந்தப் போட்டி நவம்பர் 16ஆம் திகதி நடக்கிறது.

போட்டி அட்டவணையை கிரிக்கெட் சபையின் செயலாளர் நாயர் மும்பையில் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

''ஹைதராபாத்தில் புதிய அரங்கில் போட்டி நடக்கும். இலங்கை அணியின் ஐந்தாவது போட்டி ஜோத்பூர் அல்லது ஜெய்ப்பூர் ஏதாவது ஒரு நகரில் நடக்கும். போட்டிகள் பகல் - இரவுப் போட்டிகளா என்பதை, சம்பந்தப்பட்ட மாநில கிரிக்கெட் அமைப்புகளிடம் ஆலோசித்த பின்னர் அறிவிப்போம்,'' என்றார். (8)


## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழாச் சிறப்பம்சம்


### நல்லருள் புரிந்திடும் தாயே!

தேல்லிநகரதில் கோயில் கொண்டருள் புரியும்
தெய்வ சண்டிகா துர்க்காதேவியே சரணம்
தேன்மதுரத் தமிழ்போன்ற வுன்நாமம்
தேனாகி யென்னுளமெலாம் இனிக்குதம்மா
துன்பங்கள் தீர்த்தெமைக் காத்திடும் தாயே!
உன்நாமந்தனை வாயாரப் பாடியே நானிற்பேன்
நன்மைபல நல்கியேன் பாமாலை தனையேற்று
நல்லருள் புரிந்திடு தெல்லிமாநகருள்ளாளே!

-தெல்லியூர் சி.ஹரிகரன்



## அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம் - தெல்லிப்பழை




பாடு. பரவு. பணிசெய். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அனுசரணையுடன்

நோற்றார் மனத்தில் நினைத்ததை எல்லாம் நொடியில் அளிப்பவள் நீயே!

விழா சிறப்புற வாழ்த்துவோர் :-
ANDRA Digital Image
Uppumadam Junction, Kondavil


# பிரதமர் - ஜே.வி.பி. உடன்பாடு தொடர்பாக தமிழ் கட்சிகள் ஒரே முடிவெடுப்பது அவசியம்

## அதற்காகப்பேச அழைக்கிறார் சந்திரசேகரன் எம்.பி.

தீவிர தமிழர் விரோதக் கட்சியான ஜே. வி.பி.யுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செய்துகொண்டுள்ள 12 அம்ச உடன்படிக்கை தொடர்பாகத் தமிழ் கட்சிகள் அனைத்தும் தனிப்பட்ட முரண்பாடுகளை ஒதுக்கி விட்டு ஒரே முடிவை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் வலியுறுத்தியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட விடயம் உட்பட ஆறு அதிமுக்கியமான விடயங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்துவதற்காக அனைத்துத் தமிழ் அமைப்புகளுக்கும்தான் அவசர அழைப்பு விடுத்துள்ளார் எனவும் சந்திரசேகரன் கூறினார்.

''அரசியல்முக்கியத்துவம்வாய்ந்த இந்த விடயம் தொடர்பாகத் தனி ஒரு அமைப்பாக நாம் முடிவுசெய்வதை விட அனைத்துத் தமிழ் அமைப்புகளும் ஒருமித்து தீர்மானம் ஒன்றை எடுப்பதே சிறப்பாக அமையும்'' எனவும் கருத்துத் தெரிவித்தார் சந்திரசேகரன்.

இதுகுறித்து கட்சித் தலைவர்களுக்கு சந்திரசேகரன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தால் நமது ஆதரவைப்பெற்ற ஒருவரே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறக்கூடிய நிலைமையுள்ளது. ஆகவே, தமிழ் பேசும் மக்களாகிய நாம் இத்தேர்தலை எவ்வாறு பயன்படுத்தப்போகிறோம் என்பதில் கவனத்தோடு, அதிக அக்கறை செலுத்தியாகவேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் பின்வரும் அம்சங்கள் பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியுள்ளது.

* வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு.
* முஸ்லிம் சமூகத்தின் அரசியல் எதிர் பார்ப்புகளுக்கான தீர்வு.
* மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும், அரசியல் கோரிக்கைகளையும் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி வேட்பாளர்கள் உத்தரவாதமளிக்கும் நீண்டகால, உடனடி வேலைத்திட்டம்.
* புற்றீசல்போல் தலைதூக்கி வரும் இனவாத அரசியல் யுகத்தில் இருந்து எமது மக் களை பாதுகாத்துக்கொள்வதில் ஜனாதிபதி வேட்பாளர் எமக்கு அளிக்கும் உத்தரவாதம் மற்றும் வாக்குறுதிகளின் நடைமுறைச் சாத்திய மான நம்பகத்தன்மை.
* ஜே.வி.பியினருக்கும், ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டினால் தமிழ் மக்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள அபாயகரமான அரசியல் சூழல்.
* தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு தமது அபிலாசைகளையும் அரசியல் கோரிக்கைகளையும் உலகறியச் செய்யும் விதத்தில் தமிழர் ஒருவரைப் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துதல்.

ஆகிய விடயங்கள் தொடர்பாக அலசி ஆராய்ந்து, சகல தமிழ்க் கட்சிகளும் அமைப்புகளும் ஒருமுகப்பட்டு ஒரு முடிவை எடுத்தால், அது இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பமாகவும், தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு ஒரு புத்தெழுச்சியாகவும் அமை யும். இது தொடர்பாக அவசரமாக ஆராய ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்துவது தற்போதைய காலத்தின் தேவையாகக் கருதப்படுகின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

# யாழ்ப்பாணம்-தென்மராட்சி இடையில் பஸ்சேவை சீரில்லை என முறையீடு!

யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சிக்கு சேவையில் ஈடுபடும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்சேவை சீராக நடைபெறுவதில்லை என்று பயணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பஸ்சேவை குறிப்பிடப்பட்ட நேர அட்டவணைக்கேற்ப சீராக இடம்பெறுவதில்லை என்றும்-

குறிப்பாக மாலை நேரங்களில் இவ்வாறான சீரற்ற பஸ்சேவை இடம்பெறுகின்றது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாலை வேளையில் யாழ்.நகரிலிருந்து தென்மராட்சிக்குச் செல்லும் பஸ்கள் நீண்டநேர இடைவெளிகளிலேயே சேவையில் ஈடுபடுகின்றன எனக் கூறப்படுகிறது. இதனால் பயணிகள் நீண்டநேரம் காத்திருந்து செல்ல வேண்டியுள்ளதுடன், பஸ்ஸினுள் நெரிசலையும் எதிர்கொள்கின்றனர் எனக் கூறப்பட்டது.

இதுதொடர்பாகப் பாதிக்கப்பட்ட பயணிகள் உரிய அதிகாரிகளிடம் எடுத்துக் கூறிய போதும் எவ்விதமான ஒழுங்கும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது (9-1)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்விப் பத்திர அறிவித்தல்

பின்வரும் பொருள்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவதற்குத் தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| விரிவுரை மண்டபக் கதிரைகள் | 70 |
| உருக்குப் புத்தக ராக்கை | 50 |
| கண்ணாடி முகப்பிலான அலுமாரி | 06 |
| அலுவலகக் கதிரை | 08 |

கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப்பணமாக ரூபா 1000/- உம் மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாக ரூபா 15000/- உம் யாழ். பல்கலைக்கழகச் சிறாப்பரது கருமபீடத்தில் அல்லது பல்கலைக்கழக கிளை மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 90501இற்குப் பணமாகச் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன், சிரேஷ்ட உதவிநிதியாளரிடம் (விநியோகம்) தொடர்பு கொண்டு கேள்விப்பத்திர ஆவணங்களை 08.09.2005 தொடக்கம் 12.09.2005 திகதி வரை காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் *நிதியாளர், யாழ்.பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்* என முகவரியிடப்பட்டு 19.09.2005 பிற்பகல் 2.30 மணிக்கு முன்பதாகப் பதிவுத்தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மரத்தளபாடங்கள் வழங் குக்கான கேள்விப்பத்திரம் UJ/SK/T/07/05'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் பி.பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள், அல்லது எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட அவர்களது பிரதிநிதிகள் சமுகம் தரலாம்.

**பதிவாளர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(சி/44908)(26-32-45-15)

## விவரம் திரட்டு

யாழ்ப்பாணம்,செப்.8

ஜனாதிபதித் தேர்தலின்போது கடமையாற்றவுள்ள உத்தியோகத்தர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் டிசம்பர்மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காகத் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களின் விவரங்களை அரசதிணைக்களங்களூடாகத் திரட்டி வருகின்றது.

இதுதொடர்பான சுற்றறிக்கைகள் சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(9-13)

## சமூக விரோதிகளை எச்சரித்து தீவகத்தில் சுவரொட்டி

குருநகர்,செப்.8

சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோரை எச்சரிக்கும் சுவரொட்டிகள் தீவகத்தின் பல இடங்களிலும் ஒட்டப்பட்டு உள்ளன.

தீவகநலன்பேணுவோர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இச்சுவரொட்டிகளில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விபசாரம், கசிப்பு மற்றும் முறைகேடான மது விற்பனை ஆகியவை சமூக விரோதச் செயல்கள் எனவும் இச்செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8-51)

## நீங்காத நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 01 . 09 . 1954



இறப்பு 08 . 09 . 2004

**அமரர்**

**கருணைநாதன் மெற்றில்டா ஞானசீலி**

*“இதோ ஆண்டவரின் அடிமை உமது வார்த்தையின்படியே எனக்காகட்டும்”*

ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும்
சீராக எம்முடன் நீர் வாழ்ந்த வாழ்வை
பெரும் பேறாக நினைக்கிறோம் ~ அம்மா
மாறாத கவலையுடன் வாழும் நாம்
உம் ஆன்ம சாந்திக்காய்
என்றும் இறைவனை வேண்டிடுவோம் ~ அம்மா

இல.84,
கொழும்புத்துறை வீதி
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
*கணவன், பிள்ளைகள்.*

nilavu.com
இதயம் குளிரும் இணையம்
www.nilavu.com

இப்போது யாழ் நகரில்
**எமது பயிற்சி நிலையம்**
புதிய பிரிவுகள் ஆரம்பம்

**140, Navalar Road, Jaffna. T.P. 0714 801 391**

விசேட சலுகைகள்
50% வரை
செப்டெம்பர் 20 ஆம் திகதி வரை

**கணினி கற்கை நெறிகள் :**

- Diploma in Microsoft Office 3-Months
- Diploma in Graphics Designing 4-Months
- Diploma in Web Designing 3-Months
- Diploma in Web Programming 3-Months
- Diplomain Hardware and Networking 3-Months
- Diploma in Computer Programming 3-Months
- Diploma in Software Development 6-Months
- Diploma in Multimedia Designing 6-Months

குறிப்பு:
மாணவர்கள், இல்லத்தரசிகள், அலுவலர்களுக்கு ஏற்ற வகையில் காலை 7 முதல் இரவு 10 மணி வரை பயிற்சி நேரம்.
ஒவ்வொருவருக்கும் தனிக் கவனம் செலுத்தப்படும்.
ஒவ்வொரு கற்கை முடிவிலும் சிறப்பு பயிற்சியில் ஈடுபடுத்தப்படுவர்.
தொழில் சார்ந்த முறையில் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.
பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு.

**மேலதிக தொடர்புகளுக்கும் உங்கள் பதிவுகளுக்கும் :**
**Training Division, (Dream Solutions Pvt Ltd)**
**140, Navalar Road, Jaffna. T.P. 0714 801 391**

# கேள்வி கோரல்கள்

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### பருத்தித்துறை கிழக்கு கடற்கரை வீதியின் புனர்நிர்மாணத்திற்கான கேள்விகோரல்கள் அறிவித்தல்

*சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழங்கல்கள்*

**உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலைகோரல்கள்**

01. பருத்தித்துறை கிழக்கு, கடற்கரை வீதியின் புனர்நிர்மாண வேலைக்கான மூடிய கேள்விகோரல்களை மாகாணப்பணிப்பாளர் கேள்விச்சபையின் சார்பாக மாகாணப்பணிப்பாளர், வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.
 கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 30.09.2005 அன்று பிற்பகல் 2 மணியுடன் முடிவடையும்.
 கேள்விப்பத்திரங்களைத் தயாரிப்பதற்குரிய படிவங்களை பின்வரும் காரியாலயங்களில் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.
 I. மாகாணப் பணிப்பாளர் வ-கி (வ) அலுவலகம், கடற்கரைவீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
 II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
 III. மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி, வவுனியா.
 கேள்விப்பத்திர ஆவணங்கள் 08.09.2005 தொடக்கம் 29.09.2005 வரை மீள் அளிக்கமுடியாத வைப்புத் தொகையான 750.00 (பெறுமதிசேர் வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெறவேண்டும்.
02. தகுதிவாய்ந்த கேள்விகோரல்களைக் கோருபவர்கள் பின்வரும் தகைமை பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.
 அ. கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் தரம் ஆ - 6 இல் அல்லது அதற்குமேல் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
 ஆ. கேள்விகோரல் விலை கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும். கேள்விகோரல் ஆவணங்களைப் பின்வரும் அலுவலகங்களில் இலவசமாகப் பார்வையிடமுடியும்.
 I. மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
 II. மாகாணப்பணிப்பாளர் வ-கி (வ) அலுவலகம், கண்டி வீதி, வவுனியா.
04. முன்கேள்விகோரல் கூட்டம் 21.09.2005 அன்று காலை 10 மணிக்கு மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.
05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்விகோரல் முடிவுதிகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.
06. கேள்விப் பாதுகாப்புப் பணமான ரூபா 60,000 உரிய பாதுகாப்புப் பத்திரம் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல்வேண்டும். ஏற்றுக் கொள்ளக்கூடிய பாதுகாப்புப் பத்திரம் இல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் மாகாணப் பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிடப்பட்ட முடிவு காலத்திற்கு முன் சேர்ப்பிக்கப் படவேண்டும்.
08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.
 கேள்விகோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாகி இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
09. மேலதிக விவரங்களைப் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவுசெய்து தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். | 021-2222517 |
| மாகாணப் பணிப்பாளர் வ-கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி, வவுனியா. | 024-2222826 |
| அல்லது பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021-2222968 |

**மாகாணப் பணிப்பாளர் வ-கி (வடக்கு),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரைவீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-44889)(32-15-45)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## சுந்தரம்பிள்ளை இராசேந்திரம்

09.08.2005 இல் இறைபதம் அடைந்த எமது குலவிளக்கு சுந்தரம்பிள்ளை இராசேந்திரம் அவர்களது வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் இன்று (08.09.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற விருக்கின்றன. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 13.07.1952 மறைவு 08.08.2005

ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (39733)(29-12-16-18) -குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மதியாபரணம் சரஸ்வதி



தோப்பு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதியாபரணம் சரஸ்வதி 06.09.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரவாகு மதியாபரணத்தின் அன்பு மனைவியும் அமிர்தலிங்கம், ஞானமலர், ஞானசேகரம், பரமேஸ்வரி, புஸ்பமலர், மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் நளினி, துரைராசா, ரங்கராணி (றமணி), தர்மகுலசிங்கம், தர்மசேகரம், முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமியும் பூபாலசுந்தரம் (தோப்பு), பவளம் (தோப்பு), பூமணி (நவக்கிரி), மகேஸ்வரி (தேவி -நவக்கிரி), அன்னம்மா (நவக்கிரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கரத்தினத்தின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52/27, லோட்டஸ் வீதி,
வண்.வடமேற்கு,
யாழ்ப்பாணம். (39749)(29-12-16-18)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சிதம்பரப்பிள்ளை பொன்னுப்பிள்ளை



யாழ்ப்பாணம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வவுனியா, வெளிக்குளத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை பொன்னுப்பிள்ளை 04.09.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி சிதம்பரப்பிள்ளையின் மனைவியும் மகேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி (கனடா), கமலமலர் (கனடா), காலஞ்சென்ற இலக்குமணநாதன் (கனடா), பரமேஸ்வரி, அம்பிகைபாகன் (பிரான்ஸ்), சந்திரன் (ஹொலண்ட்), செல்வராணி (பிரான்ஸ்) ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற நாகநாதி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், இரட்ணகோபால் (கனடா), இராசதுரை (ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்), வசந்தா (கனடா), புஸ்பா (பிரான்ஸ்), மஞ்சு (ஹொலண்ட்), உதயன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் கனடாவில் வசிக்கும் சிவலோகநாதன், சிவநாதன், ஜெகநாதன், மேகநாதன், ஜெகதீஸ்வரன், ஜெயபவானி, ஜெயராஜா, சிவாஜினி, தர்சினி, முகுந்தன், எலிஷா, பிரான்ஷி மற்றும் கதிர்காமநாதன் (பிரான்ஸ்), சகுந்தலாதேவி, அனுஷா, பிரேம்குமார் (ஆசிரியர், சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலயம்), முகுந்தன் (யூனியன் அசூரன்ஸ் ஊழியர்) மற்றும் பிரான்ஸில் வசிக்கும் குமரன், ரமணன், காயத்திரி, கீத்தா, ரேணுகா, சத்தியா மற்றும் சன்ஜா, சரோன் (ஹொலண்ட்), ஜெபநேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வெளிக்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வெளிக்குளம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

179/10, வெளிக்குளம்,
வவுனியா. (சி-45069)(29-12-16-18)

தகவல்:
பிரேம்குமார்.

## போதகர் தம்பையா பாலசுப்பிரமணியம்

(இலங்கை நாற்சதுர சுவிஷேச சபை,
வல்வெட்டித்துறை - போதகர்)



கற்கோவளம், கடற்கரை வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்டவரான போதகர் த.பாலசுப்பிரமணியம் அவர்கள் 06.09.2005 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் திருமதி பா.ஆனந்தராணி (பாமா) வின் அன்புக் கணவரும் ஜனோவாவின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தம்பையா-தெய்வி தம்பதியரின் அன்புப் புதல்வரும் ஆறுமுகம் - செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.09.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கற்கோவளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை சபை போதகர்கள், விசுவாசிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

241, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (39741)(29-12-16-18)

தகவல்:
இலங்கை நாற்சதுர
சுவிஷேச சபை, யாழ்.மாவட்டம்.

# காணிக்கச்சேரி

தென்மராட்சி, செப்.8

மிருசுவில் வடக்கு பெரியாவோடை குடியேற்றத்திட்ட குடியிருப்பாளருக்கான காணிக்கச்சேரி எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

மிருசுவில் வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் இந்தக் காணிக் கச்சேரி நடைபெறும். (எ-117)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

பாலர் பாடசாலை (ஆங்கில மூலம்) கல்வி தொடர விரும்பும் மாணவர்களுக்கு உகந்தது. 426(302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

## யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை தரம் 6 இற்கான அனுமதி -2006

எமது பாடசாலையில் தரம் 6 - (2006) இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் பாடசாலையினால் கோரப்படுகிறன. விண்ணப்பப் படிவங்களைப் பாடசாலை அலுவலகத்தில் பெற்று, 15.10.2005 இற்கு முன்பு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (39739)(29-12-16-18)

அதிபர், யா/மெதடிஸ்த
பெண்கள் உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை.

# துயர் பகிர்கின்றோம்

கரவெட்டி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த திரு. பத்மகுமார் அவர்களின் அன்புத் தந்தை

## திருஞானசம்பந்தமூர்த்தி பத்மநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களது துயரிலும் பங்குகொள்வதுடன் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

கோபால தொலைத் தொடர்பு
நிலையம்.
மந்திகை, புலோலி. (C/45077)

324, Palaly Road, Jaffna.



BIT
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
1st Semester
New Batches will be Commen d
Weekend: 10th Sept. at 09.00 a.m.
Weekday: 12th Sept. at 05.00 p.m.
MCS 324, பலாலி வீதி, (ஆலடிச் சந்தியருகே), யாழ்ப்பாணம்.
Supported by UNDP/JRRP

நாதலீஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
கார்த்திக், ரோஜா, கௌசல்யா, விவேக் நடித்த
சந்தித்தவேளை
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி-43363)

மனோகரா யாழ்ப்பாணம்
ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த
தாஸ் இன்று மட்டும்
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30,
நாளைமுதல் சிம்பு, கோபிகா நடித்த
தொட்டி ஜெயா (சி-44110)

ராஜா யாழ்ப்பாணம்
சுரேஸ்கோபி நடித்த
பத்ரம்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.) (சி-43380)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த
அந்நியன் (டொல்பி ஒலியமைப்பு)
காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வன்னியசிங்கம் சற்குணம்



பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி சற்குணம் வன்னியசிங்கம் 6 ஆம் திகதி காலமானார்.

கத்தின் அன்பு மனைவியும் தவமணிதேவி, புவனேஸ்வரி, வரதராஜா, மயூரகிரி ஆகியோரின் அன்புத் தாயும் குலநாயகம், இராஜரட்ணம் (ஜேர்மனி), சாரதாதேவி (கனடா), சிவயோகம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் குலேந்திரன் (ஜேர்மனி), மகேந்திரன், குமுதினி, சயந்தன் (ஆஸ்திரேலியா), அருள்மொழி (ஜேர்மனி), அருள்ராஜ் (ஜேர்மனி), அருள்காந்தன் (ஜேர்மனி), பவானந்தன் (கனடா), சுதர்சினி (ஜேர்மனி), வினோதினி (கனடா), சுகன்யா (கனடா), சிவாஜினி (ஜேர்மனி), சிவதர்சன் (ஜேர்மனி), கௌசிகா (பிரான்ஸ்), பிரசாத் (ஜேர்மனி), ஆர்த்திகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஜேந்தினி, கோகிலன், கோபிகா (ஜேர்மனி), விஷ்ணுவரதன் (ஜேர்மனி), மிதுஷியா (ஜேர்மனி) அஸ்மிதா (கனடா), ஆரணி (ஜேர்மனி), கிருத்திகா (பிரான்ஸ்), அருஷா, கிஷா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தீத்தாங்குளமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (39738)(29-12-16-18)

தகவல்:
பத்தமேனி, அச்சுவேலி. க.வன்னியசிங்கம் (கணவர்).

## திருமதி அல்பீனம்மா மனுவேற்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்,
சென்.தோமஸ் வித்தியாலயம் -மாதகல்)



இளவாலையைச் சொந்த இடமாகவும் நீர்கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவரான திருமதி அல்பீனம்மா மனுவேற்பிள்ளை அவர்கள் 05.09.2005 திங்கட்கிழமை நீர்கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை அருளப்பு (சித்த ஆயுள்வேத வைத்தியர்)- திருமதி விக்ரோறியா ஆகியோரின் அருமை மகளும் காலஞ்சென்ற ஆசிரியர் B.L.மனுவேற்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி செசிலியா அந்தோனிப்பிள்ளை, A.J. அல்போஸசஸ் (ஓய்வுபெற்ற அதிபர் யா/மாரீசன்கூடல் றோ.க. வித்தியாலயம்), அருட்சகோதரி சென்.ஜெறோம் (திருக்குடும்ப சபை கன்னியர்), செல்வி மேரியோசவின் (பொன்றோஸ் - இளைப்பாறிய ஆசிரியை) மற்றும் திருமதி மேரிதிரேஸ், ராணி மனுவேற்பிள்ளை (இளவாலை - இளைப்பாறிய ஆசிரியை), திருமதி பொலின்மேரி சுவாம்பிள்ளை (றோசா), காலஞ்சென்ற திருமதி மேரிறோஸ் விந்தா (இளைப்பாறிய அதிபர், வ/பாவற்குளம் கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (07.09.2005) புதன்கிழமை நீர்கொழும்பைச் சேர்ந்த தோப்பு புனித பிலிப் நேரியார் ஆலய சேமக்காலையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை. (39743)(29-12-16-18)

தகவல்:
திருமதி ராணிமனுவேற்பிள்ளை.

## கந்தையா இரத்தினம்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் அவர்கள்நேற்று (07.09.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் கந்தையாவின் மனைவியும் கொழு புத்துறையைச் சேர்ந்த வைத்தியாம்பிள்ளை - மாரிமுத்துவின் மகளும் சோமசுந்தரம், புவனேஸ்வரி, காலஞ் சென்ற பரிமளம் (மல்லிகம்) ஆகியோரின் சகோ தரியும் செல்வராசா, சுந்தரநாதன், மகேந்திரன், பாக்கியநாதன், நாகேஸ்வரி, ஜெயமலர் ஆகியோரின் அன்புத் தாயும் தவயோகராணி, நேசம்மா, யோகராணி, குணலட்சுமி, சிவலிங்கம் (தொல்பொருள் திணைக்களப் பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம்), யோகேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு. (39746)(29-12-16-18)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி மாலினி மகேந்திரன்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி மாலினி மகேந் திரன் அவர்கள் 06.09.2005 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - வீரலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் மகேந்திரனின் அன்பு மனைவியும் உபாஷினி, உஷாயினி, உஷந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் விஜயசேகரனின் அன்பு மாமியாரும் பாரத்தின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆனந்தநடராசா சுபத்திரா (மைத்துனி)
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில் .
T.P.: 021 4590157

Rqhel 10969
Berlin,
West Germany.
T.P.: 004930251228 0 (39744)(29-12-16-18)

# போராளிகளைத் திருப்பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் எங்களுடைய போராளிகள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியிருக்கிறார்கள்.

முழுக்க முழுக்கவே சிறிலங்கா படைத் தரப்பினுடைய ஒழுங்கமைப்பின் கீழேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக்கொண்டு இருக்கின்றன. இதை நாம் ஆதாரத்துடன் பலமுறை கண்காணிப்புக்குழு ஊடாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆனால், அவர்கள் இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான எந்தமுயற்சியையும் எடுக்கவில்லை. இன்னும் இன்னும் எமது போராளிகள் மீதான தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக எமது போராளிகளை நாம் இழந்து கொண்டிருக்க முடியாது. எனவே, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து அரசியல் துறைப்போராளிகளை வெளியேற்றுமாறும், அனைத்துப் போராளிகளையும் எங்கள் நிர்வாகப் பகுதிக்குள் அழைத்துச் செல்லுமாறும் எங்கள் தேசியத்தலைவர் பணித்திருக்கிறார்.

தேசியத் தலைவரின் இந்தப் பணிப்பை எங்கள் போராளிகளுக்குத் தெரிவித்து எமது நிர்வாகப் பிரதேசத்திற்குள் வரச்செய்துள்ளோம். இதற்கான முழுப்பொறுப்பையும் சிறிலங்காஅரசுதான் ஏற்க வேண்டும். ஏனெனில், தமிழீழப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் எங்களுடைய அரசியல்துறைப் போராளிகள் பணிகளை மேற்கொள்ளலாம் என்பது யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலே ஏற்கப்பட்ட விதிமுறை. இதற்கு முரணாக படைத்தரப்பு யுத்தகாலம் போலவே எங்கள் போராளிகளைப் படுகொலை செய்வதுடன் எம்மீதான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியும் வருகிறது.

எங்கள் போராளிகளைத் தொடர்ந்து அப்பகுதியிலேயே இருக்கவைத்து இழப்புகளைச் சந்திக்க அனுமதிக்க முடியாது என்பதால் எமது போராளிகளைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பான பகுதிக்கு வருமாறு எங்கள் தலைவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கைகூட இப்போது கேள்விக்குறியாகி இருக்கிறது. ஏனெனில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்த முடியாத நிலையை சிறிலங்கா படைத்தரப்பு தோற்றுவித்திருக்கிறது. இதனால், யுத்த நிறுத்தச் சூழல் நெருக்கடிக்குள்ளாகியிருக்கிறது.

இதுபற்றி நாளைய தினம் (இன்று) நோர்வேத் தூதுவருடனும் கண்காணிப்புக்குழுத் தலைவருடனும் தீவிரமாக விவாதிக்க இருக்கிறோம். எங்களுடைய நிலைப்பாடுகளை உறுதியாகத் தெரிவிக்க இருக்கிறோம். இதையடுத்து எமது அடுத்த கட்ட நகர்வுகள் என்ன என்பதை வெளிப்படுத்த இயலும்.

***கேள்வி:*** போராளிகளை மீளப் பெற்றுள்ளது என்பது போருக்கான தயாரிப்பா?

***பதில்:*** இது போருக்கான தயாரிப்பு என்பதைவிட போருக்கான தூண்டுதல். போர்ச் சூழலை உருவாக்கும் வகையில் தான் சிறிலங்கா படைத்தரப்பின் நடவடிக்கைகள் எங்களுக்குத் தெரிகின்றன. ஏனெனில் நாங்கள் பலமுறை சுட்டிக்காட்டிய பின்பும், பலமுறை எங்களுக்கு உத்தரவாம் அளித்த பின்பும் போராளிகள் கொல்லப்படுகின்ற நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

படைத்தரப்பு ஆயுதக்குழுக்களை தங்களது படை முகாம்களுக்குள்ளும், பாதுகாப்புக்குள்ளேயும் வைத்துக்கொண்டும் அவர்களுடன் இணைந்துதான்போராளிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலைமையை நாங்கள் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது. பொறுக்க முடியாது பொறுத்துக்கொண்டு இருக்கவும் முடியாது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாகத்தான் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் எங்களுடைய போராளிகளை பாதுகாப்பாக எமதுநிர்வாகப் பகுதிக்குள் வரவழைத்து இருக்கின்றோம். அடுத்த கட்ட நிலைமைகளைப் பொறுத்துத்தான் அடுத்த கட்ட முடிவுகளை எமது தலைமைப்பீடம் எடுக்கும்.

***கேள்வி:*** சிறிலங்கா அரசுத்தலைவர் தேர்தலில் ஜே.வி.பியின் 12 நிபந்தனைக ளையும், ஜாதிக ஹெல உறுமயவின்12 நிபந்தனைகளையும் மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுள்ளார் என்பது குறித்து?

***பதில்:*** இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனெனில், இதைத்தான் செய்து கொண்டு இருக்கிறார்கள். இப்போது வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள். அதாவது, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய முன்வைத்து இருக்கும் நிபந்தனைகள்தான் இப்போதும் நடைமுறையில் இருக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு, அமைதிப் பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்த அமுலாக்கம் உள்ளிட்ட அவர்கள் நிபந்தனைகளாக எதனையெல் லாம் வெளிப்படுத்தி இருக்கிறாரகளோ அவ்வளவும் இப்போதும் நடைமுறையில் இருக்கிறது. இப்போது அதை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டு அறிவித்துள்ளார்கள்.

இவர்கள் கூறுகின்ற இந்த நிபந்தனைகள் ஏற்கனவே நடைமுறையில் இருப்பதால்தான் 2 ஆண்டுகளுக்கும் மேலாக அமைதிப்பேச்சுக்கள் முடங்கிக்கிடக்கின்றன. யுத்தநிறுத்த சூழல் நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறது.

யுத்தம் மற்றும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவசரமான மனிதாபிமான கோரிக்கைகள் நிராரிக்கப்பட்டு அவர்கள் மிகவும் மோசமான வாழ்வைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் தமிழ் மக்கள் விரக்தியும் சலிப்பும் அடைந்துள்ளனர்.

சிங்கள தேசம் தமிழ் மக்களுக்கு எதையுமே வழங்கப்போவதில்லை என்பதை இதன்மூலம் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும் -என்றார்.

*(மிகுதி நாளை)*

## ஜே.வி.பி. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகையில் நடைபெற்றது. பிரதமர் ஜே.வி.பியுடன் உடன்பட்டுள்ள விடயங்கள் எனக்கூறப்படும் அம்சங்கள் குறித்துப் பொது ஜன ஐக்கிய முன்னணியின் கட்சித் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் தமது அதிருப்தியை வெளியிட்டனர்.

பொதுக்கட்டமைப்பு, போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம், நோர்வேயின் அனுசரணை என்பன உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து ஜே.வி.பியுடன் பிரதமர் கண்டுள்ள இணக்கம் குறித்து லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள் அங்கு ஆட்சேபம் தெரிவித்தனர்.

ஜே.வி.பியுடன் சில விடயங்கள் ஆராயப்படுகின்ற போதிலும் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லையென்றும் -

ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட விடயங்கள் மீள்பரிசீலனைக்குட்படுத்தப்படுமென்றும் - பிரதமர் அங்கு உறுதியளித்திருக்கிறார்.

அதேபோல், இறுதியாகத் தயாரிக்கப்படும் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து பொது ஜன ஐக்கிய முன்னணி கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்படுமென்றும் பிரதமர் அந்தக் கூட்டத்தில் மேலும் உறுதியளித்தாராம். (ஐ-க)

## அரச பிரதேசங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலகங்கள் தொடர்ச்சியாகத் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றமை, புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு மாறாக அரச படைகள் அங்கு சுற்றிவளைப்புத் தேடுதல்களை ஆரம்பித்திருப்பது, கடமையில் ஈடுபட்டிருக்கும் புலிகளின் உறுப்பினர்களும் மற்றும் ஆதரவாளர்களும் சுட்டுக்கொல்லப்படுகின்றமை போன்ற நடவடிக்கைகளினால் சீற்றமடைந்துள்ள புலிகளின் தலைமை தமது போராளிகள் அனைவரையும் வன்னிக்கு அழைத்துள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்.குடாநாட்டிலிருந்தும் நேற்றுமுன் தினம் மாலை தொடக்கம் போராளிகள் வெளியேற ஆரம்பித்தனர். நேற்று நண்பகலுடன் புலிகளின் அனைத்துத் துறைசார் போராளிகளும் தமது பணிமனைகளை விட்டு முற்றாக வெளியேறிவிட்டதை அவதானிக்கமுடிந்தது.

இதனையடுத்து யாழ். குடாநாட்டின் பல இடங்களிலும் இயங்கிவந்த விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மற்றும் நிர்வாக அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடந்தன.

யாழ்ப்பாணத்தில் இருந்த போராளிகள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் முகமாலைச் சோதனைச் சாவடியூடாக வன்னிக்கு வெளியேறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

போராளிகள் அவசர அவசரமாக வெளியேறியதையடுத்து குடாநாட்டுப் பொதுமக்கள் பெரும் திகிலடைந்தனர். அடுத்து என்ன நிகழுமோ என்ற ஒருவகைப் பய உணர்வுடன் அவர்கள் நடமாடியதையும் காணமுடிந்தது.

இந்தப் பதற்ற நிலையின் பின்னணியில் கொழும்புக்கான நோர்வேத்தூதுவரும், கண்காணிப்புக் குழுத் தலைவரும் இன்று காலை விசேட ஹெலிக் கொப்டரில் வன்னிக்கு விரைகிறார்கள்.

இன்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடுவர் என்றும்- பதற்ற நிலையைத் தணிக்கும் முயற்சிகளில் ஈடுபடுவர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஐ-க)

## அரசு - புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடம் இலங்கையில்தான் உள்ளது. எனவே, இதை அரசு ஏற்றுக்கொள்ளும். விடுதலைப் புலிகள் நாட்டுக்கு வெளியில் பயணிக்க வேண்டுமாயின் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் பல மணித்தியாலங்கள் தரித்தே செல்லவேண்டும். அதனால் விடுதலைப் புலிகளாலும் இந்தஇடம் ஏற்றுக் கொள்ளத்தக்கது எனும் முடிவுக்கு நாம் வந்தோம்.

இருதரப்பினரையும் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் சந்திக்க விரைவில் நோர்வே அரசு அழைப்பு விடுக்கும்.

அதேவேளை, இம்மாதம் 19 ஆம் திகதி நியூயோர்க்கில் இலங்கை இணைத் தலைமைகளின் - அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே - அதிவிசேட கூட்டம் ஒன்றிற்கும் அழைப்பு விடுத்துள்ளார் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன்.

இந்தச் சந்திப்பு இலங்கையில் அதிகரித்து வரும் பாதுகாப்பு நெருக்குவாரம், யுத்த நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்தல் என்பன பற்றி அழுத்தம் கொடுத்துப்பேசப் படும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

## வெற்றிலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானித்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் என்ற காரணத்தினால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் 'கை' சின்னத்தில் போட்டியிட வேண்டுமென்று முன்னதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இத்தேர்தலில் பிரதமருக்கு முழுமையான ஆதரவை வழங்க முன்வந்துள்ள ஜே.வி.பி. தேர்தலில் தாம் முன்னர் அரசுக் கூட்டமைப்பில் அங்கம் வகித்தபோது - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புச் சின்னமாகப் பயன்படுத்திய வெற்றிலைச் சின்னத்தின் கீழேயே இப்போதும் பிரதமர் போட்டியிட வேண்டும் என அடித்துக் கூறிவிட்டது. அதையடுத்தே வெற்றிலைச் சின்னத்தின் கீழ் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை பிரதமர் தற்போது மேற்கொண்டு வருகிறார் எனக் கூறப்படுகின்றது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் அக்கட்சியின் சின்னத்தில் போட்டியிடாமல் தவிர்ப்பது குறித்து கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் அதிருப்தி கொண்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ-க)

## மீட்கப்பட்ட குழந்தை நீதிமன்றப் பாதுகாப்பில்

தென்மராட்சி செப்,8

கைதடிப் பகுதியில் அனாதரவாக காணப்பட்டு பொலீஸாரினால் மீட்கப்பட்ட ஒரு மாதம் நிறைந்த சிசு தற்போது சாவகச்சேரி நீதிமன்றப் பொறுப்பில் உள்ளது.

இந்தச் சிசுவின் பெற்றோர் உடனடியாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (9-117)

## 'சுடர் ஒளி' மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் மீது ஓகஸ்ட் 29 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஊடகவியலளர்களும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தை மிகவும் கொடிய சம்பவம் என்று கூறியுள்ள கொழும்பைத் தலைமையிடமாகக் கொண்ட ஊடகவியலளார் பாதுகாப்பு அமைப்பின் நிர்வாக இயக்குநர் ஆன் சுப்பர் அரசியல் வன்முறைகள் தொடர்ந்து நடைபெற்றுவரும் சூழலில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை என்றும் அதில் கூறியுள்ளார்.

## உயர்தர ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்ட சில முன்னணி பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் நேற்றையதினம் உடனடியாகவே 'உதயனுக்கு' அனுப்பியிருந்தனர்.

முழுமையான பெறுபேறுகள் இன்னும் வெளிவராத நிலையில் நேற்றுமுற்கொண்டு கிடைத்த முடிவுகளின்படி மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்ற மாணவர்களின் விபரங்கள் சில வருமாறு:-

**யாழ்.இந்து**

* **கணிதப்பிரிவு** - சி.மயூரன், ந.பானுகோபன், ச.தனேசன், கு.முகுந்தன், ச.நடராசா சர்மா.
* **உயிரியல் பிரிவு** :- பொ.சிவபாலன், ம.விஸ்ணுகாந்.
* **வர்த்தகப்பிரிவு** :- செ.சிவதர்சன் .

**வேம்படி மகளிர்**

* **உயிரியல் பிரிவு** :- மயூரதி சரவண பவானந்தன், மேரிநிரோஜினி முத்துக்குமார சாமி,
* **வர்த்தகப் பிரிவு** :- நொயோபின் ஜீவிதா பெனடிக்ற், நிரஜா ஸ்ரீஸ்கந்தராசா, இந்துஷா அரியரட்ணம்.

**தெல்லிப்பளை யூனியன் கல்லூரி**

* **கலைப் பிரிவு** :- செ.சிவசொரூபன், செ.திருக்குமரன், கி.சிறீதரன், த.மோகனயானி, ம.மயூரி.
* **வர்த்தகப் பிரிவு** :- மு.சொரூபினி.

**சண்டிலிப்பாய் இந்து**

* **கலைப் பிரிவு** :- இராஜாராம் விஜயகுமார்.

இதேவேளை பரீட்சை பெறுபேறுகள் நாளை பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-13-ரி)

## 2,910 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 606 பேர் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு அடிப்படை தகைமையைப் பெற்றுள்ளனர். இது கடந்த வருடத்தைவிட 6 ஆயிரத்தால் அதிகமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பரீட்சை பெறுபேற்று மீளாய்வுக்கு இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்பு விண்ணப்பிக்கவேண்டும் என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (9)

## நோர்வேயின் சிபார்சினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்துவதில் எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றிப் புலிகளுடன் பேசுவதன் அவசரத் தேவையை நோர்வே அனுசரணையாளர்களிடம் இலங்கை அரசு தெரிவித்தே வருகிறது.

அரசியல் படுகொலைகள் வடக்கு - கிழக்கிலும், கொழும்பு மாவட்டத்திலும் பாரியளவில் அதிகரித்து வருகின்றன. வெளிநாட்ட மைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஓகஸ்ட் 12 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். அவரின் கொலைக்குப் பிறகும் வேறு அரசியல் படுகொலைகள் தொடரலாம்.

யுத்த நிறுத்தத்தின் நடைமுறை வழிவகைகளை விருத்திசெய்வது பற்றிப்பேச புலிகளுடன் அவசரமாகப் பேசவேண்டும் என்பதை ஜனாதிபதி சந்திரிகா ஓகஸ்ட் 15ஆம் திகதி நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனிடம் தெரிவித்தி ருந்தார்.

இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடத்தைக் காண்பதில், கொழும்பை அத்தகைய பேச்சுக்கு ஏற்ற இடமாக நோர்வே அதன் இன்றைய (செப்ரெம்பர் - 07) அறிக் கையில் தெரிவித்திருந்தது.

இந்த இடத்தில் பேச்சை நடத்த இலங்கை அரசு இணங்குகிறது என்பதை நோர்வே அரசுக்கு அது அறிவித்துள்ளது என நேற்றைய ஜனாதிபதி செயலகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று கிளிநொச்சி செல்லும் நோர்வேத் தூதரும் கண்காணிப்புக் குழுத் தலைவரும் இந்த விடயம் குறித்துப் புலிகளுடன் பேசுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது புலிகளின் முடிவு தெரியவரும் எனக் கூறப்படுகிறது. (எ-க)

# மரண அறிவித்தல்கள்

## *சிவராசா அசோக்காந்தன்*

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவராசா அசோக்காந்தன் நேற்று (07.09.2005) புதன் கிழமை காலமானார்.

அன்னார் சிவராசா (மெக்கானிக்) - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும் லாஜினி (ப.நோ.கூ.ச. - நல்லூர்), ரஞ்சித், மயூரன் (யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), நவநீதன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னப்பிள்ளை பார்வதி ஆகியோரின் பேரனும் இராசரட்ணம், காலஞ்சென்ற ஜீவராணி ஆகியோரின் பெறாமகனும் நாகேந்திரா, இராஜேந்திரம், சிவனேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2005) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் கிழக்கு இந்துமயானத்துக்கு எடுத்துச் சென்று தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**சிவராசா (மெக்கானிக் - தந்தை)**

*03 ஆம் கட்டை*, K.K.S. வீதி, கொக்குவில் - தாவடி. (39750)

**186, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.**

## *சுப்பிரமணியம் நவரட்ணம்*



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நவரட்ணம் அவர்கள் நேற்று (07.09.2005) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (சி-45074)

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.